
பதிவு எண் 2041 மகாத்மா காந்தி வாழ்க தனிப்பிரதி விலை { உள் நாடு 1 அணா / வெளி நாடு $1\frac{1}{2}$ அணா }




| | |
|---|---|
| வருட சந்தா முன் பணம் ... | ரூ 3—0 |
| 6 மாத சந்தா ,, ... | ரூ 1-12 |
| வெளிநாட்டிற்கு ,, ... | ரூ 4—0 |

[வாரப்பதிப்பு]

ஆசிரியர்

ஈ. வெ. இராமசாமி நாயக்கர்

வியாபாரிகள் விளம்பரம் அங் 1க்கு அ. 12.
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1க்கு ரூ 2.
☞ தனி விகிதமும் உண்டு.


மாலை 3 | ஈரோடு, பிரபவ ஞு ஆடி மீ 23 உ (7—8—27) ஞாயிற்றுக்கிழமை. | மலர் 15.


## மி ன் சா ர ர ச ம்.

☞ மின்சாரரசம்.

ஒன்றே எல்லா வியாதிகளுக்கும் தேவாமிர்தம் போன்றதென உலகப்பிரசித்தி பெற்றுள்ளது. எந்த வியாதிக்கும் துளிக்கணக்கில் உபயோகித்து நிமிஷக்கணக்கில் குணம் பெறலாம். பத்தியமில்லை. அனுபானமில்லை. பால்யர் முதல் விருத்ராப்பியர் வரையில் ஸ்திரீகள் உள்பட எல்லோரும், எக்காலத்திலும் பயமின்றி இதை உபயோகிக்கலாம். பாஷாண சம்மந்தமான சரக்குகள் இதில் இல்லை.

புட்டி 1-க்கு ரூ. 2.
தபால் சார்ஜ் வேறு.




☞ மின்சாரரசம்.

ஒரு புட்டி கையிலிருந்து விட்டால் வேறு டாக்டர்களை தேட வேண்டிய அவசியமே இராது. மனிதர்களுக்கு வரும் ஆபத்தை யார் அறிவர்? எந்தசமயம் எப்படி இருக்குமோ? ஒரு வேளை ஒரு துளி மின்சாரரசமே ஒருவரை மரண அபாயத்திலிருந்து விடுவித்து விடலாம். அப்படி அநேகர் உயிர் தப்பியுமிருக்கின்றனர். ஆகவே நோயாளிகளுக்கு இது ஓர் உயிர்த் தோழன். ஒவ்வொரு குடும்பத்திற்கும் இன்றியமையா ஆபத்து நேசன். இன்றைக்கே எழுதுங்கள்.

கைகண்ட மருந்து. கேட்டால் இனாம்.

விலாசம்:-- மின்சாரரசம் கம்பெனி லிமிடெட், சேலம். (S. I.) தந்திவிலாசம்:—"Rasamco"

மதுரையில் இதன் முக்கிய வியாபாரிகள்:-T. N. சோக்கலிங்கம் பிள்ளை & சன்ஸ் இங்கிலீஷ் மருந்து ஷாப்பு வியாபாரம், வடக்கு சித்திரை வீதி, மதுரை.


மலாய நாடுகளுக்கு சோல் ஏஜண்டுகள்:— ஆர். இ. முகம்மது காசீம் கம்பெனி, கிள்ளாங், பினங், சிங்கப்பூர்.

# $ 500 இனம்! $ 500 இனம்!!

சதாநந்த யோகீஸ்வரருடைய **மகா வீரியவிருத்தி லேகியத்தை**

நாற்பது நாளும் சாப்பிட்டு குணமில்லையென்று நிரூபித்தாலும் சரி அல்லது இந்த லேகியத்தைப்போல் எவரேனும் செய்துகோடுப்பதாயிருந்தாலும் சரி மேல்கண்ட 500 (ரிங்கி ஐந்நூறும்) எங்கள் கம்பேனியிலிருந்து வெகுமதியாய்க் கோடுக்கப்படும்.

## ஒருமுறை பரிக்ஷித்துப் பாருங்கள்.




இம்மகா வீரியவிர்த்தி லேகியமானது பெரிய தபோதனர்களால் அளிக்கப்பட்டது. இந்தலேகியம் அதி விலையுயர்ந்த பொருள்களாகிய அப்ரேக், அம்பர் கஸ்தூரி, குங்குமப்பூ, வாதாம்பருப்பு, பிஸ்தா பருப்பு இன்னுமனேகவிதமான கொட்டைகளையும், மூலிகைகளையும், பஸ்பவகைக்களையுங்கொண்டு செய்யப்பட்டது இந்த அரிய லேகியமானது இவ்வளவு உயர்ந்த பொருள்களை யடக்கியதாகயிருந்தும், இதை தனவந்தர் முதற் கொண்டு தரித்திரர் வரையிலும் யாதொரு கஷ்டமின்றி வாங்கி சாப்பிட்டு இதன் அபூர்வ சக்தியையும், துரித சௌக்கியத்தையும் அடையும் பொருட்டே மிகக்குறைந்த விலைக்கு விற்கப்பட்டு வருகிறது. இது ஆண் தன்மையை கெட்டிப்படுத்துவதோடு புருஷ தன்மையில்லாமை, அசக்தி பலவீனம் மூதலியவைகளை போக்கி சுறு சுறுப்பையும் பலத்தையும் கொடுக்கும் இதுவுமன்றி நித்திரையில் நீர்வடிதலையும் நிற்கச் செய்யும். இந்த லேகியம் பிள்ளை பெற சக்தியில்லாத பெண் பிள்ளைகளுக்கு தேவாமிர்தம் போன்றது. இதை ஒருமுறைவாங்கி சாப்பிட்டு பரீட்சை பார்த்தாலன்றி இதன் உண்மை விளங்காது. இதற்கு அத்தாட்சியாக அநேக டாக்டர்மார்களும் ஆயுள் வேதவைத்திய சிகாமணிகளும், சித்த வைத்திய பதிகளும், யூனனி வைத்திய பண்டிதர்களும் இன்னம் அநேக பிரமுகர்களும் இந்த லேகியத்திற்காக ஏராளமான நற்சாட்சி பத்திரம் அளித்திருப்பதிலிருந்தே இதன் உண்மை விளங்கும் அவற்றில் சிலரத மாதிரிக்காக பெயர்களை மாத்திரம் அடியில் குறிப்பிடுகிறோம்.

### உறுதிமோழிப் பத்திரம்.

டாக்டர் M. சோட்டாசிங் L. M. S.
டாக்டர் S. துரைசாமி பிள்ளை பிரிட்டிஷ் இந்தியா டிஸ்பன்சரி
டாக்டர் M. பார்த்தசாரதி C. D. Ac.
Mr. S. ஜோஸ் டிவிஷனல் எஞ்சினீர் G. P. O.
கடப்பை, பரமஹம்ஸ சச்சிதானந்த யோகீஸ்பரரின் பிரதம சிஷ்யரும். வேதாந்த வைத்திய ஜோதிஷ பூஷணம் ஈாது சோமசுந்திர சுவாமிகள்.

திருப்பாதிரிப்புலியூர் ஆயுர்வேத பண்டிதர் ஸ்ரீமான இ. வீராசாமி நாயுடு அவர்கள்.
ஆயுள்வேத வைத்திய பண்டிதர், வை. கந்தசாமி பிள்ளை ஆயுள்வேத சித்தவைத்திய பூஷணம்.
கு. லாஸாஸ் பண்டிதன் ஸ்ரீமத் T. R, மகாதேவ பண்டிதர் அவர்களின் மருமகரும் மாணக்கருமாகிய மகா-ா-ா-ஸ்ரீ M. நடராஜ பிள்ளை.

முழு விபாமும் கேட்லாக்கில் பார்க்கவும், 20-நாள் சாப்பிடக்கூடிய லேகியத்தின் விலை $ 2-வெள்ளிதான் ஆனால் ஒவ்வொருவரும் 40 நாளைக்கு குறையாமல் சாப்பிடவேண்டும், பத்தியமில்லை, போஸ்டேஜ் வேறு, உடனே எழுதுங்கள். 40 நாள் சாப்பிடக்கூடிய லேகியம் $ 3-75.

பிரான்ஜ் ஆபீஸ்:— 17, சைனு ஸ்திரீட், பினாங்கு.

ஹெட் ஆபீஸ்:— காந்த ரசம் கம்பேனி, 251 சிராங்கூன் ரோட், சிங்கப்பூர்.

குறிப்பு:-இந்தியா இலங்கை பர்மாவிலுள்ளவர்கள் ஆர்டருடன் போஸ்டேஜ் உள்பட முன்பணம் அனுப்பினாலல்லது மருந்து அனுப்பப்பட மாட்டாது

### மதனகல்ப லேகியம்.

மலக்கட்டு, பசியின்மை, துரிதஸ்கலிதம் சொப்பனஸ்கலிதம் முதலியவற்றைக் குணப்படுத்தி இந்திரியத்தைக் கட்டுவதில் சிறந்த ருசிகர சித்தராசாயனம். விலை சேர் 1க்கு ரூ. 2 வி. பி. வேறு

ஆனந்த நிலையம்,. திருச்செங்கோடு (S I.)

### மகா ரசகெந்திமெழுகு.

தீராத வெண்குஷ்டம், கருங்குஷ்டம், திமிர் குஷ்டம், மேகம், ரணம், சூலை முதலிய கொடிய ரோகங்களை 1 மண்டலத்தில் பறக்கடிக்கிறது. 1 மண்டலமருந்து விலை ரூ! 4 வி. பி. வேறு கேட்லாக் இனம்.

ஆனந்த நிலையம், திருச்செங்கோடு S. I-

### சூதகரோக நிவாரணி.

பெண்களுக்குள்ள சூதகக்கட்டி, சூதகச்சிக்கல் வயிற்று வலி, சதை வளர்ச்சி முதலியவற்றைத் தீர்க்கும் அமிர்த சஞ்சீவி. கேட்லாக் இனம் விலை ரூ. 2. வி. பி. வேறு.

ஆனந்த நிலையம், திருச்சங்கோடு.

குறைந்த விலையில் மிகச் சிறந்த ஸில்க்!

# அமெரிக்கன் ஸில்க்

தூய்ய வெள்ளை, திக்கான பட்டு, தினசரி சலவை செய்யலாம். 5 முழ நீளம் x/40 இஞ்சி அகலமுள்ளது நீடித்த உழைப்பிற்கு உத்தரவாதம்.

பாகிங் தபால்செலவு இனம் விலை ரூ. 6—8—0

**கே. எஸ். முத்தையா கம்பெனி, தபாற் பெட்டி 99, சென்னை.**

## மாயவரம் ரயில்வே ஸ்டேஷன் இந்திய போஜன சாலையில் வகுப்புதுவேஷம்.

மாயவரம் ஜங்ஷனில் உள்ள இந்திய போஜனசாலையில் வலது பக்கத்தில் "பிராமணாள்" என்றும் இடது பக்கத்தில் "இதராள்" என்றும் எழுதியிருக்கிறது. ஜனத்தொகையில் 100-க்கு 3 பேர் கொண்ட பார்ப்பன வகுப்பின் பெயரை மட்டும் குறிப்பிட்டு அவர்களுக்குத் தனி இடம் வைத்திருப்பது பெரும்பான்மையான தேச மக்களுக்கு ரயில்வே கம்பெனியார் எவ்வளவு மதிப்பு கொடுத்து வருகிறார்கள் என்பது தேசீய ரத்தம் ஓடும் ஒவ்வொரு இந்தியரும் உணருவார்.

பிராமண வகுப்பார்தான் இந்திய தேசத்திற் குரித்தானவர்கள் போலும்! மற்றவர்கள் தேசமோ, உரிமையோ இல்லாத "இதராள்" என்ற அநாமதேயப் பேர்வழிகள் போலும்! ஜினிவா, கானடா, ஆஸ்த்ரேலியா, தென் ஆப்பிரிக்கா போவதற்கு இந்தியப்பிரதிநிதிகளாக கவர்மெண்டாருக்கு அய்யர், அய்யங்கார், சாஸ்திரிகள் தான் மனிதர்களாகவும் இந்தியர்களாகவும் தெரிகிறது போலும்! பிராமணர்கள்தான் உயர்ந்த ஜாதியார், வைதீகர்கள், மற்றவர்களுடன் உட்கார்ந்து சாப்பிடமாட்டார்கள் என்று ரயில்வே கம்பெனியார் அவர்களுக்கு தனி இடம் ஏற்படுத்தியிருந்தால், மற்றவர்களுடன் சாப்பிடாத வைதீகர்களடங்கிய சைவர்கள், வேளாளர்கள், நாயக்கர்கள், நாடார்கள், ஆதிதிராவிடர்களுக்கு தனித் தனி இடம் ஏற்படுத்தவேண்டும். அல்லது இந்தியர்களுக்கென்று எப்பொழுது ஓட்டல் ஏற்படுத்தினார்களோ அந்த இடத்தில் "இந்தியர்கள்" என்றுதான் எழுதவேண்டும். அந்த இடத்தில் ஒரு வகுப்பாருக்கு தனி இடம் கொடுத்தால் மற்றவகுப்பாரை அவமதித்ததாகும். ஒருவரும் பார்க்காமல் தனிமையாக சாப்பிட விரும்புபவர்களுக்கு அவர்கள் எவ்வகுப்பினராயினும் தனித்தனி அறைகள் ஏற்படுத்திக் கொடுத்து அவர்களிடமிருந்து அதிகமான கட்டணம் வசூலிக்கவேண்டும்.

சேர்ந்து ஒரு இடத்தில் சாப்பிடுவதால் உற்சாகமும், சந்தோஷமும், அன்யோன்யமும் ஏற்படுமே தவிர துவேஷம் உண்டாகாது. துவேஷமுண்டாகுமென்று யாவரேனும் சொல்வாரானால், அப்படிச் சொல்பவரே துவேஷியும் கேவலமான மிருகமுமேயன்றி மானிடப் பிறவியல்ல. நாம் இப்படி நமக்குள் வேற்றுமைகளை உண்டாக்கிக் கொண்டு, உண்டாக்குவதற்கு இடங்கொடுத்துக்கொண்டு, அன்னியநாடுகளில் போய் வெள்ளையர்கள் ரயில்களிலும், ஓட்டல்களிலும் நம்மை சமத்துவமாக நடத்தும்படி கேட்பதற்கு என்ன யோக்கியதை இருக்கிறது. ஆதலின், முதலில் நம்நாட்டில், ரயில்வே (அட்வைசரி) ஆலோசனை அங்கத்தினர்கள் ரயில்வே போஜன சாலைகளில் வகுப்பு வேற்றுமைகளை ஒழித்து சமத்துவமும் சுயமரியாதையும் நிலவ ஏற்பாடு செய்வார்களென்று நம்புகிறோம் என்று மதுரையிலிருந்து ஒரு நிருபர் எழுதுகிறார்.

## கரூரில் ஸ்ரீமான் நாயக்கர்.

27—7—27-தேதி மாலை கரூர் ஸ்ரீமான் எ. ஆர். சிவானந்த முதலியார் அவர்களின் அருமைத் தாயார் காலஞ்சென்ற ஸ்ரீமதி அகிலாண்டம்மாள் அவர்களின் உருவப்படம் ஈரோடு ஸ்ரீமான் ஈ. வெ. இராமசாமி நாயக்கரால் திறந்து வைக்கப்பட்டது. அதுசமயம் திரளான கூட்டத்தினிடையே நாயக்கருக்கு ஒரு உபசாரப்பத்திரம் வாசித்துக்கொடுக்கப்பட்டு, நாயக்கர் தலைமையில், பண்டிதர் ஸ்ரீமான் சரவணமுதலியாரவர்கள் அன்பின் உரு என்பது பற்றி ஒரு அருமையான சொற்பொழிவு நிகழ்த்தினர். ஸ்ரீமான் நாயக்கர் அதை அனுசரித்து முடிவுரையாக அன்புதான் மதம், கடவுள், கடமை, மோக்ஷம், செல்வம், தாமம் முதலியவைகள் என்பதாக பல உதாரணங்களுடன் எடுத்துக்காட்டி, மக்கள் இதற்கு விரோதமாய் நடந்துகொள்ளும் அறியாமையையும் விளக்கினர்.

## மதிப்புரை.

ஸ்ரீமான் திரு. கா. சுப்ரமண்ய பிள்ளையவர்களால் இயற்றப்பெற்ற "சைவசித்தாந்த வரலாறு" என்னும் ஒரு சிறுநூல் வரப்பெற்றோம்.

அதில் சைவநெறியானது, பாமரமக்கள் நினைத்துக்கொண்டிருக்கிறபடி ஒரு குறுகிய நோக்கமுடைய நெறிகளில் ஒன்று அன்று என்றும், அது உயிர், உலகு, கடவுள் ஆகியவற்றிற்குள்ள தொடர்பை விளக்கும் திருநெறி, குருநெறி, ஒளிநெறி என்ற ஒப்புயர்வற்ற ஒருநெறியென்றும், அதில் இறைவனை மற்ற மார்க்கங்களில் கொண்டிருக்கும் குறுகிய பொருள்களில் கொள்ளாமல், மிக விரிந்த பொருளில் கடவுள், இயவுள், கந்தழி என்று விளக்கியிருக்கிறது.

சிறக, சைவமும், தமிழும் மிகப்பழமையானவையென்றும், அவை குமரிமுதல் இமயம்வரை ஒருகாலத்திற் பரவியிருந்தனவென்றும், அவை மற்றெந்த மார்க்கத்தையும், மொழியையும் சார்ந்தவையல்லவென்றும், தமிழ் சைவநான்மறை, தமிழ்சைவ நூல், தமிழ் சைவ அந்தணர் முதலியவைகளை பின்னர்வந்த ஆரியர்கள் காபபி படித்தனர் என்றும், தென்மொழி வடமொழி ஆராய்ச்சி, நூலாராய்ச்சி, சரித்திர ஆராய்ச்சி முதலியவைகளைக்கொண்டு இந்நூலாசிரியர், சந்தேகமற, சுருக்கமாக, விளக்கமாக, தனித்தமிழில் எழுதியிருக்கிறார்.

சைவமதத்தை அறிய ஆசைப்படுபவர்கள் அவசியம் இந்நூலைவாங்கி வாசிக்க கோருகிறோம்.

விலை அணா மூன்று. இந்நூலும் மற்ற நூல்களும், திருநெல்வேலி சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகத்தில் கிடைக்கும். (ப—ர்)

## ஐக்கிய இந்திய சங்கம்.

மைடான் டில்லியில் 1927ம் வருஷவிசேட கூட்டம் இவ்வூரில்பலவருடம் வசித்தவரும், பிரபலஸ்தர்களிலொருவரும், சங்கத்தின் நன்மையை நன்குணர்ந்தவரும், தற்காலம் ஓட்டாசாலை நாகண்டை ஏஜண்டாயிருந்து வருபவருமான திரு. வள்ளியப்ப செட்டியாரவர்கள் தலைமை வகிக்க 'பார்ப்பனச் சூழ்ச்சி', 'பெண்மக்களும் ஆடவர் கடமையும்' 'அறிவு வளர்ச்சி', 'நமது சங்க அபிவிருத்தி' 'இன் சொல்' என்பதையும் பல அறிஞர்கள் பேசினர்கள். தலைவரின் அழகான முடிவுரையின் பின் சுயமரியாதைப் பாக்கள் இனிமையாகப் பாடப்பெற்று சந்தன தாம்பூலம் வழங்க மணி 9—30 க்கு கூட்டம் இனிது நிறைவேறியது என்று ஐ. இ. காரியதரிசி அறிவிக்கிறார்.

## சிவன்மலை பொய்க் கடிதம் வரைந்த பொல்லாப் பார்ப்பனர்கள்.

23—7—27 தேதி ஆடி மீ அம்மாவாசையை முன்னிட்டு சிவன்மலை என்னும் க்ஷேத்திரத்திற்கு என். எம். நடேசன் அவர்கள் தமது கூட்டத்தாருடன் வரப்போவதாகவும், அபிஷேக ஆராதனைகளெல்லாம் அவர்களே செய்து கொள்வதாகவும், ஆகையால் தக்க ஏற்பாடுகளும், பந்தோபஸ்தும் செய்து கொடுக்க வேண்டுமென சிவன்மலையிலுள்ள பொல்லாப் பார்ப்பனர்கள் கடிதம் ஒன்று ஈரோடு சர்க்கில் தேவஸ்தானக் கமிட்டியின் பிரசிடெண்டு அவர்களுக்கு எழுதியிருந்ததாகவும், அவர் அது விஷயத்தை போலீசுக்கு அறிவிக்க எண்ணி ஏற்பாடுகள் செய்ததாகவும், அச்சமயத்தில் அவ்விடமிருந்த குட்டப்பாளையம் திருவாளர் கே. எஸ். சுப்ரமண்யக்கவுண்டர் அவர்கள் (ஜில்லாபோர்டு அங்கத்தினர்) உண்மையை அறிய சிவன்மலை வந்ததாகவும், பார்ப்பனர் பலரையும் வரவழைத்து உண்மையைச்சொல்லும்படி வினவ, கடிதத்தில் கண்டபடி என். எம். நடேசன் அவர்கள் சொல்லவில்லை, வேறு யாரோ சொன்னதாக பகர்ந்ததாகவும், இதைக்கேட்ட அவர் பார்ப்பனர்களுக்கு தக்கபடி ஆசீர்வாதம்செய்தாராம்:-கோவில்களில் உங்களுக்குள்ள சொந்தம் ஏனையோருக்கு ஏன் இல்லாது போகும்? கோவில்கள் உங்களப்பனால் கட்டப்பட்டதா? அதற்குரிய சொத்துக்களெல்லாம் உங்கள் மூதாதைகளால் விடப்பட்டதா? கூலிவேலைக்கு உங்களைக் கொண்டு வந்து வைத்தார்கள் என்பதை மறந்து சர்வாதிகாரம் புரியவும் எல்லாருக்கும் எஜமானர்களாகவும் அல்லவோ நீங்கள் ஆதிக்கம்செலுத்துகிறீர்கள்? பார்ப்பனரல்லாதாரிடம் பல்லைக்கெஞ்சி தீபாராதனைக்கு காலணா கூட போடக்கூடாதா, போடுங்கள் என்று வட்கமில்லாது இரக்கும் உங்களுக்கு உயர் ஜாதியென்ற இறுமாப்பு ஏன்? உங்களுடைய அக்கிரமங்களையும், ஆணவத்தையும் அடக்க பார்ப்பனரல்லாதார் இயக்கம் தோன்றியிருக்கிறது என்று ஒரு சாக்கயவாசி எழுதுகிறார்.

மைடான்டெல்லியில் பிராமணீய மொழிந்த திதி:—திரு. வெ. ரா. ம. ராமசாமி அவர்கள் தமது தகப்பனார் திதியன்று பார்ப்பனருக்குக் கொடுத்து கும்பிட்டு விழுவதை நிறுத்தி பல அன்பர்களுடன் உணவருந்தி அளவளாவ மகிழ்ந்ததுடன், நமது சங்கத்திற்கும ரூபாய் ஒன்று நன்கொடை அளித்துள்ளார் என்று மை. ஐ. இ. சங்க கௌரவ காரியதரிசி எழுதுகிறார்.

பிராமணீய மொழிந்த நிகழ்ச்சி:—செஞ்சி தாலூகா சாத்தாம்பட்டி முத்து நாராயண ரெட்டியார் குமாரர் திரு. எஸ். எம். வெங்கட்டகிருஷ்ண ரெட்டியார் என்பவர் மிகவும் செல்வம் நிறைந்தவராவர். தகப்பனார் இறந்த காரியம், திதி முதலானவைகளுக்கும் சென்ற ஆண்டில் பார்ப்பனருக்காக ஆயிரக்கணக்கான பணம் செலவழித்த அன்னவர் சிறிது நாளாய் தான் நடாத்தின தருமம் யாவும் ஏழைகளுக்கல்லாது ஒரு சாரினருக்குச் செய்தது பயனற்றதென்று உணர்ந்து ஜூலை 23, 24 தேதிகளில் யாத்திரா பூர்த்தி பூஜையை முடிக்க பழைய கொள்கையை அறவே ஒழித்து பல்லாயிரக் கணக்கான ஏழைகளுக்கும், பந்துக்களுக்கும் அன்னமளித்ததும், பிராமணரல்லாத ஸ்ரீமான் வித்வான் ருத்ரகோடிப் பிள்ளையவர்களைக்கொண்டு உபக்யாசம் செய்வித்ததும் பிராமணரல்லாதாருக்கு ஒரு உணர்ச்சியை உண்டாக்கியது என்று சாததம்பாடி எல். ராமசாமி முதலியார் எழுதுகிறார்.

## சிலகுறிப்புகளுக்குப் பரிகாரம்

24—7—27ல் வெளியான "குடியரசு" 5வது பக்கத்தில் ஸ்ரீமான் ஸ்ரீதரஸ்வாமிகள் வரைந்துள்ள கட்டுரையில் குப்பு என்பவரும் சுப்பு என்பவரும் பேசிக்கொள்வதை பொத்தசம்பாஷணையில் சுப்பு சொல்லும் வாக்கியங்களில் வைணவன் 'சிவ' என்னும் சப்தம் உச்சரிக்காமைக்கு அரிசி யென்றும், துளசி யென்றும்கூட உச்சரிக்காமல் அமுது, துளவம் என்றுகூறுவதாக வைணவர்கள் விஷயத்தில் ஓர் குற்றம் சுமத்தப்பட்டிருக்கிறது. இவ்விதமான குற்றமற்ற சமயத்தார் வைணவர்கள் விஷயத்தில் சுமத்துவது வழக்கத்தில் இருந்து வருகிறது. வைணவர்கள் நூலில் அரிசி, துளசி என்றுசொன்னால் கடையெழுத்து சிவநாமத்தை குறிப்பதால் அதை அப்படி உச்சரிக்கூடாதென்று எழுதிவைத்திருக்கிறதா? அல்லது வைணவர்களோ அவ்விதம் சொல்லிக் கொள்கிறார்களா? என்றால் நூற்களிலும் இல்லை. இவர்களும் அப்படி சொல்லிக்கொள்வதில்லை. எப்படியெனில், வைணவர்கள் வழங்கும் ஒவ்வொரு சொல்லையும் அழகமைந்ததும் கௌரவமுள்ளதும் பெரியோர்களாலும் ப்ரபந்தங்களிலும் பாசுர வழக்கங்களிலும் வழங்கிவரும் அழகிய சொல்லையே ஒருவர்க்கொருவர் பரிபாஷையென்று வழங்கிவருவதுண்டு. அப்படி ஒவ்வொரு சமயத்தாரும் வழங்கிவருகிறார்கள் உதாரணமாக மக்களுக்கு அன்னம்கொடுப்பதை குருபூஜையென்றும், சமாராதனையென்றும், சத்திரமென்றும்; அன்னதானமென்றும், விருந்தென்றும், உண்டாட்டு என்றும், ததியாராதனையென்றும், பூஜையை பலி என்றும், சாந்தியென்றும், எஜ்ஞம் என்றும், திருவாராதனையென்றும், பாயசத்தை திருக்கண்ணமுதென்றும், விளக்குமாற்றை திருவலகென்றும், செருப்பை திருவடிஜோடுகள் என்றும் உயர்ந்ததுமுதல் தாழ்ந்ததுவரை நல்ல பதங்களை உபயோகித்து வருகிறது வழக்கம். துளசியென்று மனிதர்களை பெயரிட்டழைக்கும்போது அனேகமாக உபயோகிப்பதும் சிலர் இலைகளையும் சாமான்யமாக சொல்வதும் வழக்கமேயொழிய பெரும்பாலும் செய்யுட்களில் துளவம் யென்னும் ப்ரயோகம்தான் மிகுந்து காண்கிறது. இப்படி சைவசமயத்தோர்களும் 'தேன்றுளிக்கும் துளவக்கமழ்மார்பன்' என்றும் கூறியிருக்கிறார்கள் ஆனதால் துளவம் என்பது ப்ரயோகங்களில் உயர்ந்ததாகக்கொள்ளப்படுகிறது. அதுபோலவே அரிசியையும் அமுதென்றும் அமிந்திரியென்றும் ஏனையோர்களும் கூறுகிறார்களாகையால் பேதபுத்தியாலல்லவென்பது கொள்ளத்தக்கது. காரணம் ஊன்றிப்பார்த்தால் 'வைணவர்கள் அநுமாரை சிறிய திருவடியென்றும் சின்னியம்மாளென்றும் சின்னஜீயர் பெரியஜீயர் என்றும் சிறிய பெருமாள் என்றும் அநேக சொற்களில் சி. யென்னும் எழுத்து கலந்துவருகிறது. ஒவ்வொன்றையும்விரிக்கிற் பெருகும். உதாரணமாக கூந்தல், ரோமம், முடி, மயிர் இன்னும் சிலர் மசிரு யென்றும் ஒரே வஸ்துவுக்கு வடசொல்லாகவும் தென்மொழியாகவும் நாட்டில் வழக்கச் சொல்லாகவும் வழங்கிவருகிறார்கள். ஆகையால் மசிருஎன்றுசொல்லாதவனையெல்லாம் மும்மடங்கு சிவத்வேஷியென்று சொல்லிவிடத் தக்கதான ம. மகேச்சுரனது நாமத்தின் முதலெழுத்தென்றும் சி. சிவபிரானின் முதலெழுத்தென்றும் ரு. ருத்ரபகவானின் முதலெழுத்தென்றும் கருதித்தான் இதை யவர்களப்படி உச்சரிப்பதில்லையென்று நாம் "திருமுடிவிளக்கம்" என்று ரோமம் கழியச்செய்யும் காரியங்களில் உபயோகிப்பவர்களையும் சொல்லிவிடலாயபோலும். ஆகையால் எந்தெந்த காரியங்களை நாம் எடுத்துக் கண்டிக்கவேண்டுமோ எந்த விளக்கவேண்டுமோ

## மன்னார்குடி ஜமியத்துல் இஸ்லாம் சங்கம்.

மன்னார்குடி முனிசிபல் கவுன்சிலில் நாமினேஷன் மெம்பராயிருந்த ஜனாப் எஸ். பக்கீர் கனி ராவுத்தர் அவர்கள் காலஞ்சென்றுவிட்டபடியால், முஸ்லீம் அல்லாதார் ஒருவரை அந்த ஸ்தானத்துக்கு நியமனம் செய்யப்போகிறதாகத் தெரிந்து, முஸ்லீம் ஒருவர் நாமினேஷன் செய்யப்படவேண்டிய அவசியத்தை வற்புறுத்தி, மகாஜனங்கள் ஏகோபித்து தீர்மானித்து, மகஜர் தயார் செய்து, பொது ஜனங்களிடம் கையெழுத்து வாங்கி, ஸ்தல ஸ்தாபன மந்திரி அவர்களுக்கும், கவர்மெண்டுக்கும், தஞ்சை கலெக்டர் அவர்களுக்கும், சட்டசபைப் பிரதிநிதிகளுக்கும், அசோஸியேட் பிரஸ்ஸுக்கும், எல்லாப் பத்திரிகைகளுக்கும் தெரியப்படுத்தவேண்டுமென்று மேற்படி சங்கப் பொதுக்கூட்டத்தில் தீர்மானித்திருப்பதாக சங்கத்தலைவர் ஜனாப் எஸ். ரசூல் சாகிப் அவர்கள் எழுதுகிறார்.

## தெய்வேந்திரகுல அபிவிருத்தி சாஸ்வத நிதி லிமிடெட், ஸ்ரீவில்லிபுத்தூர்.

(இந்தியன் கம்பெனி ஆக்டுப்படி 1927—28ம் வருடத்து 3-ம் நம்பராக ரிஜிஸ்டர் செய்யப்பட்டது).

தெய்வேந்திரகுல முன்னேற்றத்தை முக்கிய நோக்கமாகக்கொண்ட இந்நிதி, பலனி, விருதி சௌகரியங்களுக்கு கடன் உதவும். அவரவர் சௌகரியத்திற்கேற்ப மாதாந்தரச் சந்தாக்களும் முறையே 45, 84, 120 மாதங்களில் செலுத்தலாம். மீந்துவதை வட்டியுடன் டிப்பாசிட்டும் செய்துவரலாம். அன்பர் அனைவரும் தங்கள் தங்களால் இயன்ற வழிகளிலெல்லாம் உதவி ஊக்கப்படுத்துமாறு வினயமாய் கேட்டுக்கொள்ளும்

வக்கீல் அன்டு சேர்மன்
இரா. து. நல்லதுற்றலம் பிள்ளை.

காரைக்குடி அச்சுக்கூடத் தொழிலாளர் சங்கம்:—பிரபவ வருஷம் ஆடி மீ 13உ மாலை 4 மணிக்கு டைமன் பில்டிங் மேன் மாடியில் 'ஊழியன்' உதவி ஆசிரியர் திரு வ. இராமசாமி ஐயங்காரவர்களின் தலைமையில் மேற்காணும் பெயரோடு கழகமொன்றை அமைக்கும் பொருட்டு ஓர் கூட்டம் 'ஊழியன்' அச்சுக்கூடத்து போர்மென் திரு- த ப. கோவிந்தசாமி ராவ் அவர்களால் கூட்டப் பெற்றது.

இச்சங்கத்தின் இவ்வருடத்திய தலைவராக திரு வ இராமசாமி ஐயங்கார் அவர்களையும், 'குமரன்' அச்சுக்கூடக் காரியஸ்தர் திரு. ரெங்கநாதய்யங்காரவர்களை பொக்கிஷதாரராகவும், திரு. த. ப. கோவிந்தசாமி ராவ் அவர்களும், எஸ். சத்தியவாசம் பிள்ளை அவர்களும் கூட்டுக் காரியதரிசிகளாக இருந்து வருவதெனவும் தீர்மானங்கள் ஏகமனதோடு நடந்தேறின என்று காரியதரிசிகள் அறிவிக்கிறார்கள்.

---

அம்மட்டோடு செய்வதே நலம். எதிலும் அதிகமாக கூட்டியோ கழித்தோ செய்வது விபரீதமேயாகுமென்பதற்கு "சர்வத்த அதிவர்ஜயேத்" யென்பதை நினைப்பில் வைத்தே நாம் எதிலும் முயலவேண்டுமென்பதை பணிவுடன் சொல்லிக்கொள்ளுகிறேன்.

ஓர் வைணவன்

## மதராஸ் கவர்மெண்டு சட்ட (ஜெனரல்) இலாகா.

சேன்ட் ஜார்ஜ்கோட்டை 1927-ஞு ஆகஸ்ட்-மீ 1-உ

## விளம்பரம்.

1927-ஞு ஏப்ரல்-மீ 6-உ விளம்பரத்தை யொட்டி மகாஜனங்களுக்கு தெரியப்படுத்துவதென்னவென்றால்:— 1927-ஞு ஆகஸ்டு-மீ 8-உயிலிருந்து மதராஸ் கலெக்டரவர்கள் பாஸ்போர்ட் முதலானவைகள் தரமாட்டாராதலால், பாஸ்போர்ட், விஸாஸ் (Passport & Visas) முதலானவைகளுக்கு விண்ணப்பங்கள் "கவர்மெண்டு செக்ரிடரி, சட்ட இலாகா, சென்ட். ஜார்ஜ் கோட்டை, மதராஸ்" என்ற விலாசத்திற்கே அனுப்பப்படவேண்டும்.

டி. ராகவய்யர்,
கவர்மெண்டு செக்ரிடெரி.

## திருத்தம்.

சகோதரர்களே!

31—7—27 தேதி 'குடிஅரசு' பத்திரிகையில் இராமனுதபுரம் ஜில்லா சுற்றுப்பிரயாணத்தைப் பற்றி எழுதியிருக்கிறவியாசத்தில் 'சிவகெங்கை ராமச்சந்திரன் படையாச்சி' என்பதற்கு பதிலாக 'சிவகெங்கை ராமச்சந்திரன் சேர்வை' என்று திருத்திக்கொள்ளக் கோருகிறேன்.

(ப—ர்)

## டாக்டர் தியாகராயப் பெருமான் ஞாபகார்த்தக் கழகம்.

1927-ஞு ஆகஸ்ட்-மீ 1-உ சென்னை பழய வண்ணார்பேட்டை சஞ்சீவிராயன் கோவில் தெருவு 112 நெ. கிருகத்தில் காலஞ்சென்ற ஸ்ரீமான் சர். பி. தியாகராயப் பெருமான் அவர்களது ஞாபகார்த்தமாக "தியாகராய மெமோரியல் கிளப்" என்னும் நாமதேயத்துடன் ஒரு கிளப் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது என்று மேற்படி கழகக் காரியதரிசி தெரிவிக்கிறார்.

---


## அகில இந்தியாவைக் கலக்கிய கோயமுத்தூர் தீர்மானத்தின்.

நமது அரும்பெருந் தலைவர்கள் டாக்டர் நாயர்—சர். செட்டியார் படங்கள் ஒவ்வொரு வீட்டிலும் வைத்திருத்தல் கடமை.

தரகர்கள் வேண்டாம்.

ஆகையால் நேராக வாங்குபவர்களுக்கு ஒரு ரூபாயுக்கு 20 புஸ்தகங்கள் தருகிறோம்

ஆகையால் நமது தமிழ் வீரர் திரு டி. வி. சுப்பிரமணியம் அவர்கள் பாடியதும் தலைவர்கள் படங்களை உடையதுமான புஸ்தகங்களைப் பெறுமின்!

விலை ரூபாய் 1-க்கு 20 புஸ்தகங்கள்.

தபாற்கூலி வேறு

கிடைக்குமிடம் :—

ஜே. என். இராமநாதன்,
சொல்லாளர் ஆசிரியர்,
மயிலாப்பூர், சென்னை

## பொய்க்கால் மந்திரிகளை நிலைக்கவைக்க

# திருப்பூரில் மகாநாடு.

பொய்க்கால் மந்திரிகளை நிலைக்கவைப்பதற்காக ஸ்ரீமான் டி. ஏ. ராமலிங்கம் செட்டியார் ஆகாயத்திற்கும் பூமிக்குமாக பிரயத்தனப்பட்டுக் கொண்டிருக்கிறார். அப்பிரயத்தனத்தின் முதல் பாகம் ஸ்ரீமான் சுப்பராயன் அவர்கள் வேளாளர் என்பதாகவும், அந்த வேளாளரைக் காப்பாற்ற வேண்டியது வேளாள கனவான்களின் கடமை என்பதாகவும் கிளப்பி விட்டு சில வேளாள கனவான்கள் பெயரால் திருப்பூரில் ஒரு மகாநாடு என்பதாக விளம்பரப்படுத்தி வருகிறார்.

இந்த மந்திரிகளை ஆதரிக்க வேண்டிய அவசியம் நமது செட்டியாருக்கு என்ன வந்தது என்பதை பொது ஜனங்கள் நன்றாய் யோசித்துப் பார்க்க வேண்டும். ஸ்ரீமான் செட்டியாரின் கொள்கை என்ன என்பதை பொது ஜனங்கள் முதலில் சிந்தித்தால் மற்றது விளங்கும். "உன் பிறப்போ பத்து என் பிறப்போ எண்ணத்தொலையாது" என்பதாக மகா விஷ்ணுவைப் பார்த்து ஒரு புலவன் பாடினான் என்கிற கதை போல ஸ்ரீமான் செட்டியார் அவர்கள் அரசியலில் தலையிட்ட பிறகு அவரது அரசியல் பிறப்பு எண்ணத்தொலையாது என்றே சொல்ல வேண்டும்.

சமீப காலமாக அவரது அரசியல் தொண்டு என்பது சர். சி. பி. ராமசாமி அய்யர் அவர்களுக்கு பரமானந்த சிஷ்யனாயிருப்பதிலும் ஸ்ரீமான்களான பட்டக்காரர் வி. சி. வெள்ளியங்கிரிக் கவுண்டர் ஆகிய கனவான்களை சுவாதீனப்படுத்திக் கொள்ளுவதில் பாடுபடுவதிலுமே முடிந்து விட்டது.

ஏனென்றால் சர்க்காரை சிபார்சு பிடித்து உத்தியோகம் பெற சர் சி. பி அவர்களும், பொது ஜனங்களிடம் சிபார்சு பிடித்து ஓட்டு பெற மேற் கண்ட வேளாள பிரமுகர்களும் இருந்தால்போதும் என்பதே அவரது துணிபாய் விட்டது. இம்மாதிரி சுருக்க வழியில் சமபாதிக்கும் பலன் ஒருக்காலும் மணமுள்ளதாயிருக்காது என்பது நமது உறுதி.

ஸ்ரீமான் செட்டியாரிடத்தில் நமக்கு எப்போதும் சிறிது அனுதாபம் உண்டு. அதாவது சுயமரியாதையைவிட்டு பாமரமக்களையும் குடியானவர்களையும் அரசாங்கத்திற்கு காட்டிக்கொடுத்து அரசாங்கம் அடிக்கும் கொள்ளையில் தாங்களும் ஒரு பாகம் பெறுவது என்பதையே குறியாகக் கொண்டு சுயநலத்திற்கு பாடுபடுவதானகொள்கையுடைய தற்கால அரசியலின் பேரால் நாட்டுக்கும் மக்களுக்கும் துரோகம் செய்து வாழும்கூட்டத்தில ஸ்ரீமான் டி. ஏ. ராமலிங்க செட்டியாரும் ஒரு முக்கியஸ்த்தராயிருந்தாலும், அக்கூட்டத்தில் சேர்ந்த மற்றவர்களைப் போல் ஸ்ரீமான் செட்டியாருக்கும் என்ஒரு பங்குவாக்கூடாது என்பதும், அவருக்கு வந்திருக்க வேண்டிய முறை கூட அவசரத்தினாலும் அகம்பாவத்தினாலும் தவறி விட்டதே என்பதும் தான்.

ஆனால் மேல் கண்ட அரசியல் சூதில் வெற்றி பெற்று பலனடைந்தவர்கள் பெரும்பாலும் கூடுமானவரை ஒரேகொள்கையில் இருந்து வந்தவர்கள் தானே அல்லாமல் ஸ்ரீமான் செட்டியாரைப் போல் அடிக்கடி மாறி வந்ததாலல்ல. ஸ்ரீமான் செட்டியார் இடமாறுதல்களை தன்னோடு மாத்திரம் வைத்துக் கொள்ளாமல் ஸ்ரீமான் வெள்ளியங்கிரி கவுண்டர் அவர்களையும் கூட இழுத்து அடிக்கடி வழுக்கலில் சறுக்கி விழும்படி செய்து விடுகிறார்கள். ஸ்ரீமான் செட்டியார் நம் நாட்டு வேளாள சமூகத்தின் நாடியை சரிவர உணர்ந்திருப்பாரானால் இத் தந்திரத்தில் இறங்கி இருக்க மாட்டார். காலசக்கிரசுழற்சியினால் நாட்டில் உள்ள ஒவ்வொரு சமூகத்திற்கும் பகுத்தறிவும் சுதந்திர உணர்ச்சியும் ஏற்பட்டிருப்பது போலவே நமது வேளாள சமூகத்திற்கும் சுதந்திர உணர்ச்சி ஏற்பட்டிருப்பதை ஸ்ரீமான் செட்டியார் அறியவில்லை போலும். பகுத்தறிவில்லாமல் வெறும் விளம்பரங்களையும் சிபார்சையும் கண்டு மக்கள் ஏமாந்து ஓட்டுக்கொடுத்து வந்த காலம் மலையேறி விட்டது. இப்போது ஒன்று பணம் கொடுக்க வேண்டும். அல்லது யோக்கியமாகவாவது நடந்து கொள்ளவேண்டும். அல்லது தங்கள் சமூக நன்மைக்காவது உதவவேண்டும் என்கிற அளவுக்கு வேகமாய் மாறி வருகிறது. சிபார்சு செலாமணியாகும் காலம் மலையேறிவிட்டது. இதை அறியாதவர்கள் கண்டிப்பாய் ஏமாற்றப் படுவார்கள்.

நமது செட்டியார் இந்த பொய்க்கால் மாதிரி மந்திரிகளை ஆதரிப்பதற்காக போடப்பட்ட கூட்டத்தை திருப்பூரில் போடுவானேன்? கோயமுத்தூரில் உள்ள அறிவாளிகளை விட திருப்பூரில் மேம்பட்டவர்கள் இருக்கிறார்கள் என்பதாலா? அல்லது கோயமுத்தூரை விட திருப்பூர் பெரிய பட்டணம் என்பதாலா? அல்லது அந்த ஊரார் கேட்டுக் கொண்டார்கள் என்பதாகவா? என்பது ஒன்றும் விளங்கவில்லை. திருப்பூர் பஞ்சு வியாபாரிகளுக்கு மிகவும் அவசியமாயிருக்கிற ஒரு காரியத்தின் பெயரை அதாவது பருத்தி சட்டத்தில் சில மாறுதல்கள் செய்வதாக ஆசைக்காட்டி அதன் மூலம் கூட்டத்தைச்சேர்க்க ஏற்பாடு செய்துகொண்டு, பொது ஜனங்கள் மந்திரிகளை ஆதரிக்கிறார்கள் என்று ஒரு பொய்க் கதையை உண்டாக்கச் செய்த சூழ்ச்சியே அல்லாமல் மற்றபடி வேறு என்ன நாணயம் இதில் இருக்கிறது. ஸ்ரீமான் ராமலிங்க செட்டியார் இந்த மந்திரிகளை ஆதரிக்க இதுவரையில் வெளிப்படையாய்ச் சொல்லியிருக்கும் காரணம் ஒரே ஒன்றுதான். அதாவது "பார்ப்பனரல்லாதாருடைய முன்னேற்றத்திற்கு உழைத்து வருவதாகச் சொல்லும் ஒரு கக்ஷியார் பார்ப்பனரல்லாத மந்திரிகளை அதிகாரத்திலிருந்து நீக்குவது சரியல்ல" என்கிறார்.

இந்த வார்த்தை சொல்ல நமது ஸ்ரீமான் ராமலிங்கம் செட்டியாருக்கு உரிமை உண்டா என்றுதான் கேழ்கிறோம். இதேபார்ப்பனரல்லாதார் முன்னேற்றத்திற்கு உழைப்பதாய் சொல்லிக்கொண்டு இதே பார்ப்பனல்லாதார் கக்ஷியில் இருந்த இதே ஸ்ரீமான் ராமலிங்க செட்டியார் மூன்று ஒரு சுமாருக்கு முன்பு பார்ப்பனால்லாத மந்திரிகளை அதிகாரத்திலிருந்து நீக்க முயற்சி செய்து கக்ஷிசேர்ந்து பார்ப்பனரல்லாத மந்திரிகளின்மேல் நம்பிக்கையில்லாத தீர்மானம் கொண்டுவந்து ஓட்டுக்கொடுத்தவரா அல்லவா? அப்படியிருக்க இவர் இந்தமந்திரி கேழ்ப்பதில் ஏதாவது பொருள் இருக்கிறதா என்பதை யோசித்தால், இது பொய்க்காரணமென்பது விளங்காமல் போகாது. ஸ்ரீமான் செட்டியார் இப்போது காங்கிரஸ்காரரா? அல்லது பார்ப்பனரல்லாதார் கக்ஷிக்காரரா? அல்லது மந்திரி கக்ஷியார் என்கிற இன்டிபென்டென்ட் கக்ஷியாரா? ஒரு கக்ஷியிலும் சேராமல் தன் இஷ்டப்படி நடப்பவரா? இவரது அரசியல் கொள்கை என்ன? சமூக இயல் கொள்கை என்ன? அக்கொள்கைகளுக்கு தக்கபடி இதுவரை நடவடிக்கையில் என்ன செய்து வந்திருக்கிறார்? இவைகள் ஒன்றும் இல்லாமல் ஊரில் இருக்கிறவர்கள் எல்லாம் பயித்தியகாரர்கள். தான் மாத்திரம் ஒரு தனிப்பட்ட அவதாரம் என்று வெறும்பேச்சைப் பேசிக்கொண்டு எல்லா கொள்கைகளையும் பரிகாசம் பண்ணிக்கொண்டிருப்பதால் என்னபயன் அடைய முடியும். மற்றும் ஸ்ரீமான் செட்டியாரின் சொந்த அபிப்பிராயங்கள் பலவற்றை இது சமயம் வெளியில் சொல்லஇஷ்டமில்லையானாலும் திருப்பூர் கூட்டத்தின் முடிவுக்குப்பின் வெளியாக்கலாம் என்றே இருக்கிறோம். பொதுவாய் திருப்பூர் கனவான்களுக்கும் மற்றும பலருக்கும நாம் எச்சரிக்கை செய்வது என்னவென்றால், நமது சமூக முன்னேற்றத்திற்கு இடையூறான காரியங்களுக்கு இடம் கொடுத்து விடாதீர்கள். இவர்களது சொந்தக்காரியம் நடந்தபின்பு மறுபடியும் உங்களை எந்த ஊர் என்று கேழ்பார்கள். வீணாக நாடு சுயமரியாதை அடையும் சமயத்தை இரண்டொரு சுயநலக்காரர் வார்த்தையில் ஏமாந்து பாழாக்காதீர்கள்.சில சுயநலக்காரர்களுக்காக ஒரு சமூகத்தையோ நாட்டையோ பலிகொடுத்து விடாதீர்கள் என்பதுதான். மற்றவை பின்னால்.

---

## சுயமரியாதை இயக்கத்தை ஒழிக்க பார்ப்பனர்களின் சூழ்ச்சி.

ஆரியர்கள் என்னும் பார்ப்பனர்கள் தமிழ் மக்களுக்கு இழைத்துள்ள கொடுமைகளையும் வஞ்சகங்களையும் ஒழிப்பதற்கு நமது நாட்டில் ஆயிரக்கணக்கான வருஷங்களாக பல பெரியார்களும் பல இயக்கங்களும் அவ்வப்போது தோன்றி மக்களுக்கு உணர்ச்சி அளித்து வந்த சமயங்களிலெல்லாம் பார்ப்பன சூழ்ச்சிகளால் அவைகள் ஒழிக்கப்பட்டும் மறைக்கப்பட்டும் வந்திருப்பதற்கு எத்தனையோ கதைகளும் சரித்திரக் குறிப்புகளுமிருக்கின்றன. அதுபோலவே தற்காலம் நமது நாட்டில தோன்றியிருக்கும் சுயமரியாதை உணர்ச்சியையும் அழிப்பதற்கு பார்ப்பனர்கள் பல சூழ்ச்சிகள் செய்து வருகிறார்கள். அச்சூழ்ச்சிகளில் சர். சிவசாமி அய்யர் என்கிற ஒரு வக்கீல் பார்ப்பனர் கண்டு பிடித்து இருக்கிற சூழ்ச்சி மிகப் பெரிய சூழ்ச்சியாகும். இந்தமாதிரி சூழ்ச்சிகளை பான் இப்பார்ப்பனர்களின் பெரியோர்களான

வேதகாலம் மனுதர்ம சாஸ்திர காலம் முதலிய காலத்துப் பார்ப்பனர்களும் செய்து வந்திருக்கிறதாக அந்த வேதங்களும் சாஸ்திரங்களுமே ருஜுப்பிக்கின்றன. இதுபோலவே சற்காலமனுக்களில் ஒரு பழம் பெருச்சாளி மனுவாகிய மேல் கண்ட சர். பி. சிவசாமி அய்யர் என்பவர் ஒரு மனுதர்ம சாஸ்திரத்தை உண்டாக்க சர்க்காரை வேண்டிக்கொள்ளுகிறார். அதாவது இந்தியன் பினல் கோடில் மத சம்மந்தமான குற்றம் செய்பவர்களை தண்டிப்பதற்கு என்று ஏற்படுத்தப்பட்ட 295, 297, 298-வது பிரிவுகளில் மதஸ்தாபகரை தூஷிப்பவர்களை தண்டிக்க இடமில்லை ஆதலால் 298-வது பிரிவுக்குப் பிறகு புதிதாக ஒரு பிரிவைச்சேர்க்கவேண்டும் என்றும், அதாவது,

'எந்த வகுப்பாரின மனதையாவது புண்படுத்தும் வண்ணம் ஒரு மதஸ்தாபகரையோ தெய்வத்தையோ குருமார்களையோ அவதார புருஷர்களையோ தூஷித்தாலும் அல்லது பத்திரிகையில் எழுதினாலும் அப்படிப்பட்டவர்களுக்கு 2 வருஷ தண்டனை விதிக்கவேண்டும்'

என்பதாக ஒரு புதியசட்டம் இயற்றவேண்டும் என்று யோசனைசொல்லுகிறார். இம்மாதிரி ஒரு சட்டம் ஏற்பட்டு விட்டால் மதத்தின் பேரால் பார்ப்பனர்கள் செய்யும் அக்கிரமங்களை யாரும் அசைக்கமுடியாது என்பது அவர்களது சூழ்ச்சியின்கருத்துஎன்றே சொல்லவேண்டியிருக்கிறது.

இந்தக்கருத்தை 'சுதேசமித்திரன்' பத்திரிகையும் ஜாடையாக அநேக தடவை எழுதி வந்திருக்கிறது. ஆனாலும் இப்போதுதான் ஒரு சட்ட ஞானமுள்ள பொறுப்பான மனிதரால் சட்டம் செய்யவேண்டிய வாசகங்களுடன் வெளியாயிருக்கிறது. சர். சிவசாமி அய்யர் சட்டம் கற்று சுமார் 35 வருஷம் ஆகியும், சட்டத்திற்கு வியாக்யானம் செய்து ஜீவிப்பதிலேயே காலங்கடத்தி வந்தும், இது வரை இக்குறையைப்பற்றி ஞாபகம் வராமல், இப்போது சுயமரியாதைக்கிளர்ச்சி ஏற்பட்ட பிறகு இவை ஞாபகத்திற்கு வந்திருப்பதின் பொருள் என்ன என்பது இவை வாசிப்பவர்களுக்கு விளங்காமல் போகாது.

இதே சர். சிவசாமி அய்யரின் கருத்தைத்தான் சென்ற வருடம் ஸ்ரீமான் எஸ். சீனிவாசய்யங்கார் தெரிவித்லார். அதாவது:— "வகுப்புத் துவேஷத்தைக் கிளப்பும் ஈ. வெ. ராமசாமி நாயக்கரை இன்னம் ஜெயிலில் போடாமல் வெளியில் விட்டுக்கொண்டிருப்பதற்கு சர்க்காருக்கு கண்ணில்லையா? அட்வொகெட் ஜனரல் இதை கவனியாமல் என்ன செய்கிறார்" என்று கேட்டார். இதே கருத்தைத் தான் ஸ்ரீமான் சத்தியமூர்த்தி மற்றொரு வழியில் வெளியிட்டார். அதாவது:— "பம்பாய் மாகாணத்து கல்வி மந்திரி ஸ்ரீமான் யாதவர் சென்னை மாகாணத்திற்கு வந்து வகுப்பு துவேஷத்தை உண்டாக்கி விட்டு போவதை சட்ட மெம்பர் சர். சி. பி. ராமசாமி அய்யர் எப்படி பார்த்துக்கொண்டிருந்தார். தனக்கு யாதவரை தண்டிக்க தைரியமில்லா விட்டால் தான் ராஜீனமா கொடுத்து விட்டு வேறு ஒருவரைக் கொண்டாவது ஏன் செய்திருக்கக்கூடாது" என்று கேட்டார். "சுயராஜ்ஜியா" "சுதேசமித்திரன்" "பிராமணன்" முதலிய பார்ப்பனப் பத்திரிகைகளும் "கேள்வி முறை இல்லையா? இப்படி அக்கிரமங்களை சகித்துக்கொண்டிருக்கலமா? பிராமணத் தலைவர்கள் இதைப்பற்றி கவனிப்பதில்லையா" என்று மாரடித்துக்கொண்டன. இவைகள் எல்லாம் கவனிக்கப்படாவிட்டாலும் சர். சிவசாமி அய்யரின் அழுகை கட்டாயம் கவனிக்கப்பட்டு அந்தப்படி ஒரு சட்டம் ஏற்பட்டாலும் ஏற்படலாம். நமக்கு அதைப்பற்றி கவலை இல்லை.

நாம் அவைகளுக்குப் பயந்து கொண்டு அயோக்கியர்களின் செய்கைகளைய், சூழ்ச்சிகளையும், அக்கிரமங்களையும், பனிதப் பிறப்புரிமைக்கும், மனிததத்துவத்திற்கும், சுயமரியாதைக்கும் இடையூறு விளைவிக்கும் காரியங்களையும் வெளிப்படுத்தாமலிருக்கப்போவதில்லை. பிறப்புரிமையான சுயமரியாதையானது சூழ்ச்சிக்காரர்களால், வஞ்சகர்களால் செய்யப்படும் சட்டங்களுக்கு அடங்கிவிடும் என்று எதிர்பார்ப்பது மடமையேயாகும்.

சாதாரணமாக, இந்துமதம் என்பது ஒரு குறிப்பிட்ட கொள்கையுடையது அல்லவென்பதையும் அது ஒரு பழமையான மதம் அல்லவென்பதையும், பல பெரியோர்களும் அறிஞர்களும் ஆராய்ச்சிக்காரர்களும் ஒப்புக்கொண்டாய்விட்டது. இனி சட்டம் என்னசெய்துவிட முடியும்.

எவ்வளவோ பிரத்தியக்ஷ ஆதாரங்களுடனும் அநேக நன்மையான கொள்கையுடனும் விளங்கும்கிருஸ்தவ மதத்தைப்பற்றியே பேசும்போது, கிருஸ்துநாதர் என்பதாக ஒருவர் பிறக்கவே இல்லையென்று ஒருவர் புஸ்தகமே எழுதியிருப்பது குற்றமில்லாமல் இருக்கும்போது, அஸ்திவாரத்திலிருந்தே ஆண்டப்புளுகையுடையதான இந்துமதத்தைப்பற்றி பேசுவதும், சன்று, சாறுயம், மாம்சம், பெண்கூத்தி முதலியவைகளைவைத்துப் படைக்கவேண்டிய தெய்வங்களையும், தன்னைத் தவிர வேறுதெய்வமில்லை எனகிற மதஸ்தாபகரையும், ஊரைக் கொள்ளையடித்து ஒருகூட்டத்தாருக்கே வயிறுபுடைக்கத் தின்னும்படி பொங்கிப்போட்டுவிட்டு தான் பஞ்சமெத்தையில் உறங்கிக்கொண்டும் தங்கப்பல்லக்கில் உலவிக்கொண்டும் தன்னை சன்னியாசி என்றும் துறவி என்றும் சொல்லிக்கொண்டும் திரியும் போலி குருமார்கள் என்போர்களையும் வெளிப்படுத்தினால் அது எப்படி குற்றமாகுமென்பது நமக்கு விளங்கவில்லை. இந்த மாதிரி ஆசாமிகளை வெளிப்படுத்துவதன் மூலம் இவர்களால் வயிறு வளர்க்கும் ஆசாமிகளுக்கு மனம் புண்ணாவதோடு வயிறுகூட பட்டினியால் வருந்த நேரிடலாம். அதற்கு யார் என்ன செய்யக்கூடும். சோம்பேறித் தனத்தையும் ஊரார் உழைப்பில் வயிறு வளர்ப்பதையும் விட்டு விட்டு யோக்கியமாய் பாடுபட்டு சம்பாதித்து தின்னும்படி மக்களை பழக்குவதுதான் இதற்கு பரிகாரமாகுமே தவிரசட்டத்தின் மூலம், இதை வெளிப்படுத்துகிறவரை 2 வருஷம் தண்டிக்கவேண்டும் என்பது ஒருக்காலும் பரிகாரமாகாது. வேதம்கூட கடவுளால் சொல்லப்பட்டதென்றுதான் சொல்லப்படுகிறது. வேதத்தை கண்டிப்பது தெய்வதூஷணையென்றுதான் சொல்லப்படுகிறது. இதற்காக அதன் அக்கிரமங்களை ஒரு சுயமரியாதை உள்ள மனிதன் வெளியிடாமலிருக்கமுடியுமா? உதாரணமாக அதர்வண வேதத்தில் "ஒரு கிராமத்தில் ஒரு பிராமணன் ஒரு இரவு பெண் இல்லாமல் தனியாய் படுத்திருப்பானானால் அந்த கிராமத்திற்கே கேடு" என்பதாக எழுதப்பட்டிருக்கிறதாம். இதற்காக பயந்து கொண்டு எந்த திண்ணையில் எந்தப் பிராமணன் பக்கத்தில் பெண் இல்லாமல் தனியாய்ப் படுத்திருக்கிறான் என்று தேடிப்பார்த்து அவனிடம் ஒரு பெண்ணைக்கொண்டுபோய்படுக்கவைப்பதா? அல்லது சட்டத்திற்குப்பயப்படாமல் இது சுயநலக்கார வஞ்சகர்களால் எழுதிவைத்துக் கொள்ளப்பட்டதுஎன்பதை வெளிப்படுத்துவதா என்பதை யோசித்தால் இச்சட்டத்தின்கதி என்ன ஆகும் என்பது விளங்காமல் போகாது.

எந்த மதஸ்தனானாலும் யாரானாலும் ஏதாவது ஒன்று தனக்குமாத்திரம்தெய்வம் தனக்குமாத்திரம்குரு என்றுஒன்றைச் சொல்லிக்கொள்வானானால். அதைப்பற்றி நமக்கு கவலை இல்லை. அவன் முட்டாள்தனத்துக்கு பரிதாபப்படுவதோடு அவ்விஷயம் தீர்ந்துவிடும். அப்படிக்கில்லாமல் தங்கள் நன்மைக்குமாத்திரம் என்று ஒன்றை ஏற்படுத்திக்கொண்டு அதை மற்றவர்கள் பிடரியின்பேரில் ஏற்றுவதானால் அதைகண்டிக்காமலும் ஒழிக்காமலும் இருக்க முடியவே முடியாது என்பதை ஸ்ரீமான் சர். சிவசாமி அய்யருக்கும் இதைவாசிப்பவருக்கும் சத்தியமூர்த்தி அய்யருக்கும் மித்திரன்கூட்டத்திற்கும் தெரிவித்துக் கொள்கிறோம்.

## பொன்மலை

### சமூகசீர்திருத்தக்கழக திறப்புவிழா.

2-8-27 செவ்வாய்க்கிழமை மாலை 6-மணிக்கு சி. டைப் மைதானத்தில் மேற்படி கழக திறப்பு விழா அதிவிமரிசையாக நடைபெற்றது. பட்டுக்கோட்டை உயர் திரு அழகர்சாமி நாயுடு அவர்கள் தலைமை வகித்து நமது சமூகம் தற்காலம் தாழ்த்தப்பட்ட காரணங்கள் குருட்டு நம்பிக்கை, அர்த்தமற்ற மதச்சடங்கு, இவைகளைப்பற்றியும் சொற்பொழிவு நிகழ்த்தினார். பின்னர் 'தொழிலாளி' கௌரவ ஆசிரியர் ஸ்ரீ ப. சு. தண்டபாணி செட்டியார் அவர்களும், பொன்மலை தொழிலாளர்சங்கத்தலைவர் ஸ்ரீ எ. அடைக்கலசாமி பிள்ளை அவர்களும் மேலகண்ட விஷயங்களை வற்புறுத்திப் பேசினார்கள். பின்னர் கீழ்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாய் நிறைவேறியது. தீர்மானங்கள்.

1. பொன்மலை சமூக சீர்திருத்தக்கழகம் என்ற பெயருடன் ஓர் சங்கம் ஸ்தாபிக்கப்படவேண்டுமென்று இக்கூட்டம் தீர்மானிக்கிறது. 2. அக்கழகத்திற்குஉத்தியோகஸ்தர்களாக கீழ்கண்டவர்களை இக்கூட்டம் நியமிக்கிறது.

### உத்தியோகஸ்தர்களின் பெயர்.

தலைவர் ஸ்ரீ என். கோதண்ட பாணி நாயடு உபதலைவர் ஸ்ரீ எ. ராஜகோபால் பிள்ளை காரியதரிசி. ஸ்ரீ எஸ். பி. கிருஷ்ணசாமிபிள்ளை உப காரியதரிசி ஸ்ரீ வரதராஜுலு நாயடு பொக்கிஷதாராக ஸ்ரீ டி. ஆர். ராஜகோபால் பிள்ளை, நிர்வாக மெம்பர்களாக 15 பேர்களையும் தேர்ந்தெடுத்த பின் தாம்பூலம் கற்கண்டு முதலியவை வழங்கப்பட்டு வந்தனோபசாரங் கூறப்பட்டு இரவு சுமார் 9-30 மணிக்கு கூட்டம் இனிது முடிவுற்றது என்று காரியதரிசி ஸ்ரீ எஸ். பி. கிருஷ்ணசாமிபிள்ளை எழுதுகிறார்.

---

12ம் பக்கத் தொடர்ச்சி

தேசம் சொல்லி அவர்களைத் தண்டனைக்குள்ளாக்கவேண்டுமென வெளிக்கிளம்பி வந்து விட்டதைப்போல் காண்கிறதேயல்லாமல் இதில் பொது நலமிருப்பலாக எமது சிற்றறிவுக்குப் புலப்படவில்லை. கனம் ஐயரவர்கள் இனி எந்தப்பதத்தில் தமது பொது நல அபிப்ராயத்தை எடுத்துக்காட்டுவாரோ ஈசன்தான் அறிவன். ஆயினும் இத்தகைய சூழ்ச்சிக்காரர்களினுடையவும் இவர்களால் காலமெல்லாம் நசுக்கப்பட்டு கஷ்டப்பட்டுக்கொண்டிருப்பவர்களுடையவும் உண்மைதத்துவங்களை பிரிட்டிஷ் ராஜாங்கத்தார் இந்தியாவுக்கு வந்தது முதல்நாளதுவரை சரித்திர பூர்வமாகவும் நேரிலும் தெரிந்து வந்தவர்களேயல்லாமல் "எங்களப்பன் குதிருக்குளில்லை" என்பவர் வார்த்தைகளை நமபி அவசரப்பட்டு ஏமாந்துவிடக்கூடியவர்கள் அல்லாமலிருக்கும்போது புது மனுதர்மசாஸ்திரம கல்பித்து இந்த பிரிட்டிஷ்ராஜாங்கத்தையும் அதற்கு மதிப்புரை கேட்க தைரியம் கொண்டால் அந்த நினைப்பை எதற்கு ஒப்பிடுவதென்பது நமக்கு விளங்கவில்லை.

# "மந்திரி கக்ஷி பிரசாரம்"

## பார்ப்பன பக்தர்களின் திருவிளையாடல்கள்.

## திருப்பூரில் கூட்டம்.

## இரட்டை மகாநாடு.

திருப்பூரில் திரு என். துரைசாமிக்கவுண்டர் தாகுமண்டி கட்டடத்தில் 5-8-27 மாலை 5 மணிக்கு சென்னை மந்திரிகளை ஆதரிப்போர் மகாநாடு ஒன்றைக் கூட்டுவதற்கு ஆரம்பக்கூட்டம் ஒன்று கூட்டப்பட்டது. கூட்டத்திற்கு சுமார் 30 பேர்கள் வந்திருந்தார்கள். வெளியூரிலிருந்து 10 பேரும் உள்ளூர்க்காரர்கள்சுமார் 15, 20 பேர் இருக்கலாம். வந்திருந்தவர்களில் முக்கியமானவர்கள்.

திருவாளர்கள் : பழயகோட்டை பட்டக்காரர், சங்கராண்டாம்பாளையம் பட்டக்காரர், வி. சி. வெள்ளியங்கிரி கவுண்டர், வி.சி. பழனிசாமிக்கவுண்டர், வி. சி. சுப்பையகவுண்டர், டி. எ. இராமலிங்கம் செட்டியார், டி. எஸ். சிவசுப்பிரமணிய செட்டியார், கம்பளியம்பட்டி சின்னரங்கேகவுண்டர், கே. எஸ். ரங்கேகவுண்டர், விட்டல்தாஸ் ஆனன்ஜீசேட் பி. டி. ஆஷர் சேட், பெரியசாமி செட்டியார், துரைசாமி செட்டியார், வெங்கிட்டப்ப கவுண்டர், ராயப்பகவுண்டர், கிருஷ்ணப்ப செட்டியார் முதலியவர்கள்.

ஆரம்பத்தில் கூடப்போகும் மகா நாட்டுக்கு பெயர் வைப்பதைப்பற்றி சுமார் அரை மணிநேரம் விவாதம் நடந்தது. அதில் ஸ்ரீ வெள்ளியங்கிரிக் கவுண்டர் ஜில்லா மகாநாடு என்று பெயர் வைக்கவேணுமே தவிர பிராமணரல்லாதார் என்ற பதமே தனக்கு பிடிக்கவில்லை யென்று சொன்னார். திரு டி. என். சுப்பிரமணிய செட்டியார் பிராமணரல்லாதார் மகாநாட்டுக்கு எதிர் மகாநாடு கூடுவதால் அதே பெயர் வைக்கவேண்டுவதுதான கிரமமென்று வாதித்தார். வெகு நேரத்திற்குப்பிறகு ஸ்ரீமான் டி. எ. ராமலிங்கம் செட்டியார் சொல்லியபடி இரண்டு மகாநாடு கூட்டுவதாக முடிவு செய்யப்பட்டது. அதாவது கோயமுத்தூர் ஜில்லா மகாநாடு, பிராமணரல்லாதார் மகாநாடு. ஜில்லா மகாநாடு என்பது மந்திரிகளை ஆதரிப்பதாயும், பிராமணரல்லாதார் மகாநாடு கோயமுத்தூர் தீர்மானத்தைக் கண்டிப்பதாயும் இருக்கும்.

பின் கூட்டத்திற்கு ராவ் சாஹிப் விட்டல்தாஸ் ஆனன்ஜீசேட் தலைமை வகித்தார்.

### தீர்மானங்கள்.

மேலேகண்ட மகாநாடுகள் 1927 ௵ ஆகஸ்டு-மீ 14-உ ஞாயிற்றுக்கிழமை திருப்பூரில் கூட்டுவதென்றும், பிராமணரல்லாதார் மகாநாடு காலை 9-மணிக்கும், ஜில்லா மகாநாடு மாலை 1 மணிக்கும் நடத்துவதாக தீர்மானம் செய்யப்பட்டது.

### நிர்வாககமிட்டிகள்.

உபசாரணைக்கமிட்டி தலைவர் சங்கராண்டாம்பாளையம் பட்டக்காரர் திருவாளர் வேணுடையார்க்கவுண்டர், எம். எல். சி.

### காரியதரிசிகள்.

ஸ்ரீமான்கள் வி. சி. வெள்ளியங்கிரி கவுண்டர், என். துரைசாமிக்கவுண்டர், பி. டி. ஆஷர் சேட் முதலியவர்கள்.

### பொக்கிஷதார்.

ஸ்ரீமான் மூ. பெரியசாமி செட்டியார்.

### இதரகமிட்டிகள்.

சாப்பாட்டு கமிட்டி, பந்தல் கமிட்டி, வரவேற்பு கமிட்டி முதலிய கமிட்டிகளும் ஏற்படுத்தப்பட்டன.

### அக்கிராசனர்.

வரவேற்பு கமிட்டி தலைவரும், காரியதரிசிகளும், மகாநாட்டுக்கு தலைவரைத் தேர்ந்தெடுக்க அதிகாரம் கொடுக்கப்பட்டது.

தலைவர், கூட்டத்தின்நோக்கத்தைப்பற்றி திரு வெள்ளியங்கிரிக் கவுண்டரைப் பேசும்படி கேட்டுக்கொண்டதின் பேரில் ஸ்ரீமான் வி. சி. வெள்ளியங்கிரிக் கவுண்டர் பேசியதாவது :—

எனக்கு பிராமணரல்லாதாரென்று பெயர் சொல்வதே பிடிக்கவில்லை. டாக்டர் நாயர் இருந்த காலத்தில்கூட அதினால்தான் அதே கமிட்டியை ஆதரிக்கவில்லை. பிராமணரை நாம் எப்படி தள்ளுகிறது. பட்டணவாசலில் வேணுமானால்பேசலாம். கிராமங்களில் அப்படி செய்யமுடியாது. நாமெல்லோரும் அநேகமாய் கிராமவாசிகள். கோயமுத்தூர்மகாநாட்டை கூட்டியவர்கள் எல்லோரும் பிராமணர்களோடு அளவளாவிக்கொண்டுதானிருக்கிறார்கள். அப்படியிருக்க அவர்களை ஏன் விலக்கவேண்டும் என்றும் கோயமுத்தூர் மகாநாட்டை முன்னை ஜில்லாமகாநாடாகக் கூட்டுவதாயும் அதற்கு ஸ்ரீமான் குமாரசாமி ரெட்டியாரை அக்கிராசனராகத் தேர்ந்தெடுத்ததாகவும், சொல்லப்பட்டது. அதற்குப்பின், பிராமணரல்லாதார் மகாநாடாகக்கூட்டுவதாயும் எல்லோரும் காங்கிரசில் ஒற்றுமையாய்ப் போவதென்றும் ஏற்பாடு செய்திருப்பதாக பிரமுகர்கள் ஸ்ரீமான்கள் ஷண்முகம் செட்டியார், ரத்னசபாபதி முதலியார், வெரிவேட செட்டியார் சொன்னார்கள். அதின்பேரில் நானும் நம்பி பணம் கொடுத்தேன். தலைவர் ஸ்ரீமான் குமாரசாமி ரெட்டியாரே இதற்கும் தலைமை வகிக்கிறாரென்று தெரிந்து அவருடைய நோக்கமென்னவென்று கேட்டேன். அவர் அசல் ஜஸ்டிஸ் கக்ஷிக்காரர்என்றும் ஆனாலும் இதே மகாநாட்டில் அவர் நடுநிலைமையாய்ப் போவாரென்றும் சொல்லியதின்பேரில் மகாநாட்டுக்கும் போனேன். அங்கு அவருடைய பிரசங்கத்தைப் பார்த்ததும என்னிட எண்ணத்திற்கு முற்றிலும் மாறாக இருந்தபடியால் நான் வந்துவிட்டேன். பின்னால் மகாநாட்டு பிரமுகர்களைப்பற்றி கேட்டதில் வாஸ்தவம் தான் கூட்டத்தின் நோக்கம் எங்களையும் மீறிவிட்டது, என்று சொன்னார்கள். ஆனபடியால் கோயமுத்தூர் தீர்மானம முக்கியமானவர்களைக் கட்டுப் படுத்தாதென்றும், அங்கு செய்த தீர்மானங்கள் இதர ஜில்லாவாசிகள் பெரும்பாலோருடைய அபிபிராயமல்லவென்றும் நாம் ஒரு கூட்டம் கூட்டவேண்டுமென்றும், நமது நண்பர்கள் பலர் சொல்லியதின் பேரிலும், பட்டக்காரர்கள் அவர்களும் நமது செட்டியார் முதலானவர்களும் வற்புறுத்தியதில் இம்மகாநாடுகளைக் கூட்ட ஏற்பாடு செய்திருக்கிறோம் என்று பேசிமுடிததார்

### சபையில் அதிருப்தி.

இவர் பேசும் போது கூட்டத்திற்கு வந்திருந்த வியாபாரிகள் பலர் அதிருப்திபட்டு, ஏது இவர் புதுக்கவுண்டராக இருக்கிறார் என்றும், பெரிய பிராமண பக்தனாகி விட்டாரென்றும், பலர் உள்ளூரசிரித்துக்கொண்டு வெளியே போனதோடு; அதே தேதியில் மற்றொரு மகாநாட்டை திருப்பூரில் கூட்டி கோவை மகாநாட்டை ஆதரிப்பதென்றும், அதற்காகவேண்டிய ஏற்பாடுகள் செய்யவேண்டுமென்றும், கோயமுத்தூரிலிருந்து பிரபலஸ்தார்களையும் ஈரோடு ஸ்ரீமான் நாயக்கர் அவர்களையும் டாக்டர் நாயுடு அவர்களையும் தருவிக்க வேண்டுமென்றும் பேசிக் கொண்டு வெளியே போய் விட்டார்கள். சுருக்கிக்கூறுமிடத்தில், அதை பிராமணர்கள் கூட்டமென்றே சொல்லலாம். கோவை மகாநாட்டில் கலந்து கொண்டவர்களும் காங்கிரசுக்காரர்களும் இதில் சேர்ந்தது மிகவும் வெட்கக் கேடான விஷயம்.

(ஒரு விசேஷ நிருபர்.)

---

## கரும்பியூர் சர். பி. தியாகராய வாசகசாலை பார்ப்பனரல்லாதார் வாலிப சங்கம்.

ஷை சங்கம், திருத்துறை பூண்டி தாலூக்கா கரும்பியூரில் சேஷைய்யா ராஜுவின் நன்முயற்சியால் 23-7-27ல் நிருவப்பட்டது.

இதன் முக்கிய கொள்கைகளாவன,— "திராவிடன்" "குடி அரசு" "தமிழ் நாடு" "குமரன்" பத்திரிகைகளை ஆதரித்தல், கட்டாயம் கதர் அணிதல். மதுவிலக்கு, தீண்டாமை ஒழித்தல், சுயமரியாதையை காத்தல், பார்ப்பன புரோகிதத்தை விலக்கல், ஆலய வழிபாடு முதலியவைகளில் பார்ப்பான் ஆதிக்கத்தை ஒழித்தல் முதலியன.

### நிர்வாகசபை அங்கத்தினர்கள்.


ஸ்ரீமான்கள் வெ. வீராசாமி தேவர், அ. சபாபதி பிள்ளை, குருசாமி பிள்ளை, பி. சேஷைய்யா ராஜு, கே. வி. நாராயணசாமி தேவர், வி. சுப்பையா கோன், வி. சௌந்திர ராஜலு, ராஜு, பி. ராமையா ராஜு, பாவாசா ராவுத்தர், வெங்கிடாசல முதலியார், என். சோமசுந்திரம் பிள்ளை, பி வான்மீகலிங்கம பிள்ளை, பி. கிருஷ்ணசாமிபிள்ளை.

ஸ்ரீமான் பட்டுக்கோட்டை அழகிரிசாமி நாயுடு அவர்களையும், சாமி சிதம்பரனார் அவர்களையும் ஆகஸ்டு மாதத்தில் வரவழைக்க ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

என்று கே. வி. நாராயணசாமி தேவர் காரியதரிசி எழுதுகிறார்.

---

"சுயமரியாதையே நமது பிறப்புரிமை, சுயராஜ்யம் வயிற்றுச் சோற்றுரிமை."



# குடி அரசு.

ஈரோடு, பிரபவ-ஞு ஆடி 23வ

## மகாத்மாவும் வருணாசிரமும்.

I

மகாத்மா காந்தி "தீண்டாமை ஒழிய வேண்டும், மதத்திலும் சமுதாயத்திலும் சீர்திருத்தம் ஏற்பட வேண்டும்" என்கிற கொள்கை உடையவர் என்று ஜனங்கள் நம்பி வந்தாலும், அவரது எண்ணத்திலும் பேச்சிலும் அதற்கு நேர் விரோதமான கொள்கையை உடையவராகவே காணப்படுகிறார். இம்மாதிரி எண்ணத்தோடும் பேச்சுகளோடும் மகாத்மா காந்தியின் பிரசாரம் நடைபெற நடைபெற தீண்டாமையும் மூடக் கொள்கைகளும் நாட்டில் வலிமையோடு நிலைபெற இடம் ஏற்படுமே அல்லாமல் ஒருக்காலும் இவை ஒழிக்கப்படவே முடியாது. எந்த தீண்டாமையை ஒழிக்கவேண்டுமென்று வெளிப்படையாய் பேசுகிறாரோ அதே தீண்டாமையை நிலைநிறுத்த அதே பேச்சை வியாக்கியானம் செய்வதில் பாடுபடுகிறார்.

இதைப்பற்றி முன் ஒரு தடவை கூட எழுதி இருக்கிறோம்.

உண்மையான தீண்டாமையை நமது நாட்டை விட்டு வெளிப் படுத்த வேண்டுமானால் மகாத்மா காந்தியையும் எதிர்த்து போராடித்தான் தீர வேண்டியிருக்கிறது.

தீண்டாமை இன்னது என்பது மகாத்மாவுக்கு இன்னமும் சரியாய் புலப்பட இல்லை என்பதே நமது அபிப்பிராயம். அவர் மதத்தின் பெயரைச் சொல்லிக் கொள்வதனால் பொது ஜனங்களிடம் உண்டாக்க கூடிய செல்வாக்கையும் உபயோகப்படுத்திக் கொள்ள நினைப்பதால் உண்மைத் தீண்டாமை தத்துவம் அவருக்கு புலபட மார்க்கமில்லாமல் போய்விடுகிறது. ஆதலால் மகாத்மாவின்து தீண்டாமை விலக்கு கொள்கையைப் பின்பற்றுவோமானால் மறுபடி தீண்டாமை சேற்றிலே சறுக்கி விழுகவேண்டி வரும் என்றே நாம் பயப்படுகிறோம். வெகு காலம் பொறுத்துப் பொறுத்துப் பார்த்தும், மூடி மூடி வைத்தும் கூட உண்மையான தீண்டாமை விலக்கையும் சுயமரியாதையையும் உத்தேசித்து வெளிப்படையாய் இப்போது அவரை தாக்கித்தீரவேண்டியதாய் ஏற்பட்டு விட்டதற்கு வருந்துகிறோம்.

ஏனென்றால் சமீபத்தில் தமிழ்நாட்டிற்கு மகாத்மா காந்தி வரப்போகிறார். தீண்டாமையைப்பற்றி பேசும்போது அவரது வழக்கப்படியேதான் பேசித் திருவார். அதன் மூலம் நமது எதிரிகளுக்கு அதிகமான பலம் ஏற்பட்டு நமது முயற்சியை ஒழிக்க அதை அவர்கள் உபயோகித்துக் கொள்ளுவார்கள். ஆதலால் அதை இப்போதே நாம் வெளிப்படுத்திவிடுவது மேலானதென்றே கருதுகிறோம். அதாவது மகாத்மா காந்தி நமது பார்ப்பனர்கள் சொல்லுவது போலவே நமது சமூகவாழ்வில் வருணாசிரம தர்மம் உண்டு என்றும் அது பிறவியிலேயே ஏற்பட்டது என்றும் அடிக்கடி சொல்லி வருகிறார். சமீபத்தில் மைசூரில் ஒருகூட்டத்தில் தீண்டாமையைப்பற்றி பேசும்போதும் இந்து சமூகத்தில் வருணாச்சிரம தர்மம் உண்டு என்றும், அது நமது சமூகத்திற்கு அவசியம் என்றும், ஒவ்வொரு வர்ணத்தாருக்கு ஒவ்வொரு தர்மம் விதிக்கப்பட்டிருக்கிறதென்றும், அந்தந்த வர்ணத்தார் அந்தந்த தர்மத்தை செய்யும்போது அவரவர்கள் அம்மட்டில் உயர்ந்தவர்கள் என்றும், பிராமணன் அவன் தர்மத்தைச் செய்யும்போது உயர்ந்தவனாகிறதுபோலவே மற்ற வருணத்தானும் அவனவன தர்மத்தைச் செய்யும்போது தான் உயர்ந்தவனாகிறான் என்பதாகவும் பேசியிருக்கிறார். இதைத்தான் பார்ப்பனர்களும் தாங்கள் பிறவியிலேயே உயர்ந்தவர்கள் என்பதற்கு காரணங்களாக சொல்லி வருகிறார்கள்.

வருணாசிரம தர்மத்தின் மூலமாகத்தான் நமது நாட்டில் தீண்டாமை கொள்கை அமுலில் இருந்துவருகிறதே ஒழிய வருணாசிரமம் இல்லாவிட்டால் தீண்டாமை கொள்கை பரவமார்க்கமே கிடையாது. வருணாச்சிரமதர்மம் என்கிற ஒரு உடல் இல்லாவிட்டால் தீண்டாமையென்கிற உயிருக்கு ஆட்டம் இல்லை. யோசித்துப் பார்த்தால் இந்த கொள்கைதத்துவம் எவருக்கும் விளங்காமல் போகாது. அந்தந்த வருணத்தானுக்கு ஏற்பட்ட தர்மப்படி அவனவன் நடக்கவேண்டும் என்று மகாத்மா சொல்லுவதைத்தான் தூவார் மகாநாட்டு "பிராமண சம்மேளன"மும் ஏக மனதாய் தீர்மானம் செய்திருக்கிறது

மகாத்மா சொல்லும் வருணாச்சிரமதர்மம் அதுவல்ல என்பதற்கு வேறு ஆதாரம் என்ன? மகாத்மாவும் வருணாச்சிரமம் நான்கு என்று சொல்லுகிறார். அதாவது பிராமணன், க்ஷத்திரியன், வைசியன், சூத்திரன் என்கிறார். தூவார் பிராமணச் சம்மேளனத்தாரும் மகாத்மா சொல்லும் ஆதாரத்தைக்கொண்டே க்ஷத்திரியனும், வைசியனும் உலகத்தில் இப்போது காணப்படவில்லை ஆதலால் பிராமணன், சூத்திரன் ஆகிய இரண்டு வருணத்தார் மாத்திரம்தான் இருக்கிறார்கள் என்கிறார்கள். மறைந்துவிட்ட இரண்டு வருணத்தாரைப்பற்றி நமக்கு கவலை இல்லை. இருக்கிற இரண்டு வருணத்தாரைப் பற்றியவரையிலாவது இவர்களுக்கு 'மகாத்மா' கற்பிக்கும் தர்மங்கள் என்ன? என்பது தான் நமது கேள்வி. வருணாசிரமத்தையும், அதன் தர்மத்தையும் ஒப்புக்கொள்ளுகிற ஒருவர்—அதுவும் வருணாசிரமமும், அதன தன் தர்மமும் மக்களுக்கு பிறவியிலேயே உண்டு என்று ஒப்புக்கொள்ளுகிற ஒருவர்,—தீண்டாமை இல்லை என்று எப்படிச் சொல்லமுடியும். மகாத்மா கூறும் வருணாசிரமத்திற்கு பார்ப்பனர் கூறும் தர்மத்தை விட வேறு ஏதாவது தர்மம் கற்பிக்க ஆதாரம் இருக்கிறதா? என்று பார்த்தால் நாளது வரை மகாத்மா அது வேறு என்று சொன்னதாகவே தெரியவில்லை. மைசூர் உபந்நியாசத்தில் ஜன சேவையே பிராமணர்களுடைய தர்மம் என்று சொல்லி இருக்கிறார். அது போலவே பிராமண சேவையே சூத்திரனுடைய தர்மம் என்றுதான் அவர் சொல்லி ஆகவேண்டும். பொது ஜன சேவைதான் பிராமண கர்மம் என்று சொன்ன சாஸ்திரங்களில் தான் "பிராமண சேவையே சூத்திர தர்மம்" என்று சொல்லப்பட்டிருக்கிறது.

பிராமணருக்குப் பொது ஜனசேவை செய்வதினால் மாத்திரம் உயர்வு உண்டாகுமானால் சூத்திரனுக்கு பிராமணசேவை செய்வதினால் மாத்திரம் தான் உயர்வு உண்டாகுமேயன்றி அதை விட்டு வேறு வேலை செய்வானானால் சூத்திரன் கண்டிப்பாய் தாழ்ந்தவனாகிறான் என்றுதான் மகாத்மாவின் தத்துவத்திற்குப் பொருள் ஏற்படுகிறது. இந்தப்படியானால் எந்தவிதத்தில் பிராமணனுக்கு சம அந்தஸ்தாக சூத்திரன் இருக்க முடியும் என்று மகாத்மா கருதுகிறார் என்பது நமக்கு விளங்கவில்லை.

அன்றியும் "அந்தந்த வருணத்தார் அந்தந்த தருமத்தைச் செய்து வருகையில் ஒருவருக்கொருவர் உயர்வு தாழ்வு சொல்லிக்கொள்ள இடமேது." என்றும் பேசி இருக்கிறார். அப்படியானால், அந்தந்த வருணத்தாருககுத் தனித்தனி தர்மம் ஏற்படவேண்டிய அவசியம் என்ன என்பதைப் பற்றியாவது ஒரு வருணத்தான் மற்ற வருணத்தானுடைய தர்மத்தைச் செய்வதானால் கெடுதி என்ன என்பதைப்பற்றியாவது ஒரு வார்த்தையாவது இது வரை மகாத்மா சொன்னதேயில்லை. "பொது ஜனசேவை என்பது பிராமணர்களுக்கு மாத்திரம் சொந்தமானது, அதற்காகவே அவர்கள் பிறந்திருக்கிறார்கள் என்றும் மகாத்மா சொல்லுவாரானால் மகாத்மா அவர்கள் நான்கு வருணத்தில், தான் எந்தவருணத்தைச்சேர்ந்தவர் என்று சொல்லமுடியும்? மகாத்மா சொல்லுகிற கொள்கைப்படி பார்த்தால் அவர் பிறவியில் ஒன்று சூத்திரராயிருக்க வேண்டும், அல்லது வைசியராயிருக்கவேண்டும். எனவே சூத்திரனுக்கும் வைசியனுக்கும் ஏற்பட்ட தர்மத்தைச் செய்வதை விட்டு விட்டு பிராமணனுக்கு ஏற்பட்ட தர்மமாகிய பொது ஜன சேவையை செய்வதற்கு மகாத்மாவுக்கு உரிமையேது? தன்னாலேயே நடத்திக் காண்பிக்க முடியாத வருணாசிரம தர்மத்தை மற்றவர்களை ஏற்று நடத்தும்படி சொல்வதில் ஏதாவது பொருளுண்டா? இவைகளைப்பற்றி இவ்வளவு தூரம் எழுதினது தீண்டாமை விஷயத்தில் மகாத்மாவுக்கு உள்ள குழப்பத்தை காண்பிக்கவும், அவரும் குருட்டு நம்பிக்கையில் ஈடுபட்டவரே அல்லாமல் பகுத்தறிவுக்கு மதிப்புக் கொடுப்பவராகப் புலப்படவில்லை என்பதையும் காட்டுவதற்குமே எழுதினோமே அல்லாமல் அவர் மீது குற்றம் கூற

## ஸ்ரீமான்
# சத்தியமூர்த்திக்கு வந்த புது வாழ்வு

கொஞ்சநாளைக்குமுன்பு 'சுதேசமித்திரன்' ஸ்ரீமான் ஈ. வெ. ராமசாமி நாயக்கரைப் பற்றி விஷமப்பிரசாரம்செய்த எழுதுகையில்,

"ஸ்ரீமான் ஈ. வெ. ராமசாமி நாயக்கர் நடந்துகொண்டுவரும் நடவடிக்கையையும் பேசிவரும் பேச்சையும் பார்த்தால் வெகு சீக்கிரத்தில் ஸ்ரீமான் நாயக்கர் சென்னை கவர்னர் வீட்டுக்கு கட்டித்தூக்கிக் கொண்டுபோகப்படுவார் என்று தோன்றுகிறது" என்று எழுதிஇருந்தது. அதாவது ஸ்ரீமான் நாயக்கர் சர்க்காருக்கு அவ்வளவுதூரம் நல்லபிள்ளையாய் போய்விட்டதாகவும், சர்க்காருடன் சேர்ந்துவிட்டதாகவும், இனி சர்க்காரையே ஆதரிப்பார் என்றும் ஜனங்கள் நினைக்கும்படியாக எழுதியிருந்தது. அது எழுதியதிலிருந்து நாயக்கரும் தனக்கு ஏதாவது சர்க்கார் "சன்மானம்" வரும் என்றே எதிர்பார்த்தார். கடசியாக அவர் பேரில் போடப்பட்டிருந்த இரகசியப் போலீசுகூட எடுபடாமல் இன்னமும் தொடருவதுடன் கலக்டரும் போலீசாரும் கண்ணும் கருத்துமாயிருக்கிறார்கள். இது எப்படியோ இருக்கட்டும் ஆனால் சதா சர்வகாலம் சர்க்காரை தாக்குவதாக வேஷம் போட்டு பார்ப்பனரல்லாதாரை தாக்குவதாலேயே பார்ப்பனர்களால் தேசியவீரர்என்று பெயர்பெற்று வயிறு வளர்க்கும் ஸ்ரீமான் சத்தியமூர்த்தி அய்யர் அவர்களை இப்போது சர்க்காரார் கவர்னர்வீட்டுக்கு ஒரேதூக்காக தூக்கிக்கொண்டேபோய்விட்டார்கள். அது மாத்திரமல்ல, கவர்னர் பிரபு வீட்டு வாசல் படியை காக்கும்படியும் செய்துவிட்டார்கள். கவர்னர் பிரபு வீடு மாத்திரமல்ல கவர்னர் ஜனரல் பிரபு வாயில் காக்கும்படியும் செய்தாய்விட்டது. காரணம் என்ன? ஸ்ரீமான் ஈ. வெ. ராமசாமி நாயக்கர் இந்த கவர்னர் பிரபுவின் ஆக்ஷி யோக்கியமானதாக இல்லை, பார்ப்பனர்களின் கைக்குழந்தையாய் இருக்கிறார், இவர் ஆக்ஷியில் நடைபெறாத அக்கிரமேஇல்லை என்றும், நாணயக்குறைவு என்பது இந்த கவர்னர் ஆக்ஷியில் தாண்டவம் ஆடுவதுபோல் வேறு எந்த ஆக்ஷியிலும் இல்லை என்றும் சொல்லி இவரை திருப்பி அழைத்துக் கொள்ளவேண்டும் என்பதாக கோவை மகாநாட்டில் ஒரு பிரேரேபணை பிரேரேபித்ததும், ஸ்ரீமான் சத்தியமூர்த்தி போன்றாரின் உதவியால்லாமல் கவர்னர் நிருவாகம் நடைபெறமுடியாமல் போய்விட்டதால் கவர்னர் பிரபு வீட்டிற்கு ஸ்ரீமான் சத்திமூர்த்தியை மந்திரிமார்களும் சர். சி.பியும் கட்டித்தூக்கிக்கொண்டு போகவேண்டியதாய் ஏற்பட்டுப் போய்விட்டது. பிறகு கவர்னர் பிரபு தன் வீட்டிலிருந்து ஸ்ரீமான் சத்தியமூர்த்தியை கவர்னர் ஜனரல் வீட்டுக்கு தூக்கிக்கொண்டுபோய் போடவேண்டியதாய் ஏற்பட்டுவிட்டது. அல்லாமலும்

தற்காலம் நமது கவர்னரின் நல்ல நடவடிக்கைக்கு ஸ்ரீமான் சத்தியமூர்த்திதான் நற்சாக்ஷிபத்திரமளிக்க வேண்டியதாய்விட்டது. அதற்காகவே வைசிராய் பிரபுவின் தரிசனமும் சத்தியமூர்த்திக்கு கிடைக்கும்படி செய்யவேண்டியதாய்விட்டது. ஸ்ரீமான் சத்தியமூர்த்திக்குவந்தபுதுவாழ்வேவாழ்வு! இதைக்கண்டு யாரும் பொறாமைப்படாமல் இருக்கமுடியாது. ஆனால் ஒருவிஷயம்:—சர்க்கார் வாசனையே கூடாது என்று வேஷம்போட்ட மைலாப்பூர் கோஷ்டிக்கு, சர்க்கார் சம்மந்தமான விருந்துகளுக்கு கூப்பிட்டாலும் போகக்கூடாது என்று கடும் பத்தியம்வைத்த சுயராஜ்ஜியக் கக்ஷிக்கு யேதோ ஒரு வெள்ளைக்கார சீமாட்டி விருந்துக்கு ஸ்ரீமான் ஆர். கெ. ஷண்முகம் செட்டியார் போய்விட்டுவந்ததால் "ஷண்முகம் செட்டியார்பத்தியம் தவறிவிட்டார்" என்றுகத்தின சுயராஜ்ஜியக்கக்ஷி தலைவர்களுக்கு, ஆகிய இத்தனைக்கும் ஜீவாதாரமான ஸ்ரீமான் சத்தியமூர்த்தி—தமிழ்நாடு காங்கிரஸ்கமிட்டி காரியதரிசியும காங்கிரஸ் முட்டுக்கட்டை பிரிவு கக்ஷி உப தலைவரான சத்தியமூர்த்தி—கவர்னர் பிரபுவையும் வைசிராய் பிரபுவையும் பார்க்கப்போனதின் இரகசியம்தான் நமக்கு விளங்கவில்லை. பார்ப்பனர்கள் தங்கள் காரியம் ஆவதற்கு எதை வேண்டுமானாலும் செய்வார்கள் என்பதற்கு இது ஒரு உதாரணம் என்பதைமாத்திரம் வாசகர்களுக்கு தெரிவிக்க இதை உபயோகித்துக் கொண்டோமே அல்லாமல் இதனால் தேசத்திற்கு நன்மையோ தீமையோ இருக்கிறதை காட்டுவதற்கு ஆக அல்ல. அன்றியும கவர்னர் பிரபு வீட்டுவாசல்படி மிதித்தஉடன் ஸ்ரீமான் சத்தியமூர்த்திக்கு பூர்வஞானம் வந்துவிட்டதற்கும் ஒரு சிறு உதாரணம் காட்டிவிட்டு இதை முடிக்கிறோம்.

அதாவது, நீலகிரிமலையில் கவர்னர் பிரபுவை பார்த்துவிட்டு திருமபினவுடன், மலையாளக்குடிவார மசோதா விஷயமாய் ஏற்படுத்திய சர்க்கார் கமிட்டியை பகிஷ்கரிக்கவேண்டும்என்று எல்லோரும் சொல்லிக்கொண்டிருக்கையில், தானும்கூட இருந்து நிறைவேற்றிய மலையாளக்குடிவார மசோதாவை சர். சி. பி. அய்யர் கவர்னரைக்கொண்டு நிராகரிக்கச் செய்துவிட்டாரேஎன்கிற சொரணை இல்லாமல், "சர். சி. பி. மலையாள ஜன்மிகளுக்கு கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றுகிற விஷயத்தில் கவலை எடுத்துக்கொண்டு அக்கமிட்டியை மக்கள் ஏற்றுக்கொள்ளவேண்டும்" என்று சொல்வதும், "தக்க மெஜாரிட்டி இருந்தால் மந்திரிவேலைகளை ஒப்புக்கொண்டு இரட்டை ஆக்ஷியை நடத்திப் பார்க்கலாம்" என்று சொல்லுவதும் முதலானவைகளால் எவ்வளவு புதியஞானம் உண்டாயிருக்கிறது என்பதை வாசகர்கள்தான் அறிந்துகொள்ளவேண்டும்.

---

வதற்காக அல்ல. அன்றியும் மகாத்மா நாட்டிற்கும்,மக்களுக்கும் செய்திருக்கும் அநேக நன்மைகளைப்பற்றி நமக்கும் மகாத்மாவின் அந்தரங்க சிஷியர்கள் என்று சொல்லிக் கொள்பவர்கட்கும் யாதொரு வித்தியாசமுமில்லை. எனினும் இத்தீண்டாமைவிஷயத்திலும், வருணாசிரம விஷயத்திலும்மகாத்மாவுக்குத்தெளிவுஏற்பட்டிருக்குமானால்நமது சமுகத்திற்கு எவ்வளவோ நன்மை உண்டாகும என்கிற ஆசையே இதைப்பற்றி மேலும் மேலும் எழுதிவரவும் தூண்டுகிறது.

---

# மந்திரிகளைக் காப்பாற்ற மற்றொரு கட்சி வேண்டுமாம்.

யாதாவது ஒரு காரியத்துக்கு ஆசைப்பட்டு ஏமாந்து போனவர்களும், தனக்கென தனிமரியாதை இல்லாமல் போய் விட்டதே என்று விசனப்பட்டுக்கொண்டு இருப்பவர்களும், தனக்கென ஒரு தனிக்கட்சி சேர்க்க முயலுவது பெரும்பாலும் இயற்கை. யோக்கியமான முறையில் சமாதானம் சொல்லி எதிரிகளை வெல்ல முடியாத கூட்டத்தார்களும் தங்களது ஆதிக்கத்திற்கு ஆபத்து வந்து விட்டதாகக் கருதுகிறவர்களும், ஏதாவதுசில சோணகிரிகளையும் பேராசைக் காரரையும் பிடித்து தனிக்கட்சி உண்டாக்கி, அவர்களைக் கொண்டு தங்கள் காரியம் சாதித்துக்கொள்ளுவதற்காக மற்ற யோக்கியமான கட்சியுடன் போராடுவதும், போராடச் செய்வதும் இயல்பு. இக்காரியங்களை அடிக்கடி நாம் அனுபோகத்தில் பார்த்துக் வருகிறோம். பார்ப்பனரல்லாதார் கட்சி என்பதாக ஒரு கட்சி தோன்றியது முதல் அக்கட்சிக்கு இடையூறாக நமது நாட்டில் இதுவரை எத்தனை கட்சிகள் தோன்றிமறைந்தன? அதற்கு எதிரிடையாக எத்தனை எத்தனை எதிரிகள் தோன்றிமறைந்தார்கள்? இனியும் எத்தனைதோன்றித்தோன்றி மறையப்போகிறார்கள்? என்பதை யோசித்துப் பார்ப்பவர்களுக்கு இதனுண்மை விளங்காமல் போகாது. இவ்வளவு எதிரிடைகள் தோன்றி மறைந்து வந்ததிலும் ஒரு விசேஷம் என்னவென்றால், பார்ப்பனரல்லாதாரின் கட்சியின் முக்கிய கொள்கைகளை தப்பு என்று சொல்லி வேறு கட்சி ஏற்படுத்தினவர்கள் இது வரை கிடையவே கிடையாது. இப்போது இன்னமும் ஒரு புதுக் கட்சி ஏற்படுத்த உள்ளுக்குள்ளாகப் பாடுபடும் ஸ்ரீமான் டி. எ. ராமலிங்கம் செட்டியார் கம்பெனியார் உள்பட, இதற்கு முன்னால் பார்ப்பனரல்லாதார் கட்சி ஏற்படுத்திய காலத்தில் சென்னை மாகாணச் சங்க கட்சி என்கிற ஒரு கட்சி ஏற்படுத்திய பார்ப்பனர்களுக்கு உதவியாயிருந்த ஸ்ரீமான் கேசவ பிள்ளை, ஸ்ரீமான் பி. வாதராஜுலு நாயுடு கம்பெனியார் உள்பட, மற்றும்சென்ற தேர்தலுக்கு முந்தி தேர்தலின் போது ஏற்பட்ட மந்திரி பதவி சண்டைகளின் பலனாய் ஸ்ரீமான் டி எ. ராமலிங்கம செட்டியாரால் அப்போது ஏற்படுத்தப்பட்ட கட்சியாருள்பட, ஒவ்வொருவரும பார்ப்பனரல்லாதார் கட்சி கொள்கையை ஒப்புக்கொண்டுதான் கட்சி ஏற்படுத்தி இருக்கிறார்களே தவிர வேறில்லை. ஆனால் அதற்கு உள்காரணங்கள் தான் அடிக்கடி மாற்றி மாற்றி சொல்லப்பட்டு வருகிறதே ஒழிய வேறில்லை. அதாவது கோவை மகாநாட்டுக்கு முன் பார்ப்பனரல்லாதார் கட்சியின் மீது சொல்லிக்கொண்டு வந்த குற்றமெல்லாம் "அரசாங்கத்தோடு அக்கட்சியார் ஒத்துழைக்கிறார்கள். இரட்டை ஆட்சியை நடத்திக்கொடுக்கிறார்கள்" என்கிற இரண்டு பெரிய குற்றங்களே சுமத்தப்பட்டன. கோவை மகாநாட்டுக்கு பிறகு, அரசாங்கத்தை எதிர்க்கவும் இரட்டை ஆட்சியை உதறித்

தள்ளவும் திட்டம் போட்ட பின்பு "அனாவசியமாய் அரசாங்கத்தை எதிர்க்கிறார்கள். திடீரென்று இரட்டை ஆட்சியை உடைக்கப்பார்க்கிறார்கள்" என்கிற குற்றம் சாட்டப்படுகிறது. இது யாரால் என்று பார்ப்போமானால், உத்தியோகத்திற்கும் பார்ப்பனர்களுக்கும் அடிமைப்பட்ட ஆசாமிகளாலேயே அல்லாமல் இவைகளுக்கு அடிமையாகாத பொது மக்களாலல்ல "தேசிய வீரர்களாலல்ல". சர்க்காரையும் பார்ப்பனரல்லாதார் கட்சியையும் வைவதன் மூலமும், பார்ப்பனருக்கு நல்ல பிள்ளையாயிருப்பதன் மூலமும் வாழ்ந்து வந்த சிலருக்கு பார்ப்பனரல்லாதார் கட்சி மீது மேல் கண்ட குற்றம் சுமத்துவதற்கு யோக்கியதை இல்லாமல் போனதால் அப்படிப்பட்டவர்கள் இப்போது வேறு விஷயத்தில் அக்கரை உள்ளவர்கள் போல வேஷம் போட ஆரம்பித்திருக்கிறார்கள். அதாவது, பார்ப்பனரல்லாதார் கட்சி கொள்கையை ஒப்புக்கொள்ளும் பார்ப்பனர்களையும் பார்ப்பனரல்லாதார் கட்சியில் சேர்த்துக்கொள்ளுவதில்லையாம். இப்படிச் சொல்வதன் மூலம் பார்ப்பனர்களுக்கு நல்ல பிள்ளை ஆகி பார்ப்பனரல்லாதாரை ஏமாற்றி விடலாம் என்பது இவர்களின் கூற்று. ஆனால் இவர்கள் பார்ப்பனர்களால் ஏமாற்றப்படுவார்களே ஒழிய வேறொன்றும் ஆய்விடப்போகிறதில்லை. ஸ்ரீமான்கள் ராமலிங்கம் செட்டியாரும் மார்த்தண்டம் பிள்ளையும் பார்ப்பனரல்லாதார் கட்சியில் இருந்து 6, 7 வருஷங்கள் பார்த்து தங்கள் சுயநலம் ஈடேறாமல் வெளியேறினவர்களேயொழிய கொள்கைமாற்றத்தால் அல்லவென்பது இப்போதும் அவர்கள் வெளியிட்டிருக்கும் கொள்கையைப் பார்த்தால் தெரியவரும். ஸ்ரீமான் மார்த்தண்டம் சொல்லுவது என்னவென்றால்,

பிராமணரல்லாதார் இயக்கம்............ பல வேறு வகுப்பினரின் உரிமைகள் கவனிக்கப்படல்வேண்டுமென்ற உணர்ச்சியையும் தேவையையும் பொதுஜனங்களுக்கு இடையே நன்றாய் வலியுறுத்தி விட்டன" என்று அவர்கள் சொல்லி இருப்பதிலிருந்தே இம்மாதிரி ஒரு இயக்கம் வேண்டுவதுதான் என்கிற கொள்கையை அவர் ஒப்புக் கொள்ளுகிறார் என்பதும் மற்றும்,

"ஸ்ரீமான் சி. வி. வெங்கிட்டரமணய்யங்கார் குறிப்பிட்ட முறையில் ஏதேனும் ஒரு ராஜிக்கு வந்து இந்தப் போராட்டத்தை நாம் முடிப்போமானால் அதுவே நமது வகுப்புத் தொல்லைக்கு ஏற்ற நல்ல முடிவாகும்" என்று சொல்வதனால் வகுப்பு தத்துவத்தையும் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவக் கொள்கை தத்துவத்தையும் ஒப்புக்கொள்ளுகிறார் என்பதும் நன்றாய் விளங்கவில்லையா? பார்ப்பனரல்லாதார் கட்சி செய்து வருகிற வேலையையும் பாராட்டி விட்டு அதன் வகுப்புவாரி பிரதிநிதித்துவ கொள்கையையும் ஒப்புக்கொள்ளுகிற ஒருவருக்கு வேறு கட்சி எதற்கு என்பதை வாசகர்கள் தான் யோசிக்கிறப வேண்டும்.

தவிர மற்றும் சிலருக்கு, பார்ப்பனர்களையும் பார்ப்பனரல்லாதார் கட்சியில் சேர்த்துக்கொள்ளாததால் வேறு கட்சி வேண்டுமாம். இவர்களுக்கு வேறு கட்சி எதற்காக வேண்டும். இவர்கள் கோருகிறபடியே காங்கிரஸ் சுயராஜ்யக் கட்சி, மித வாதக் கட்சி, ஹோம்ரூல் கட்சி, சுயேச்சை கட்சி, என்பதாக பல கட்சிகள் பார்ப்பனர்களையும் சேர்த்துக் கொள்ளக் கூடிய ஸ்தாபனங்களாக இருக்கும்போது வேறு ஒரு கட்சி எதற்காக வேண்டுமென்பதை யோசித்தால் பார்ப்பனரல்லாதார் கட்சியைக் கொண்டு பார்ப்பனர்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்கிற கெட்ட எண்ணமல்லாமல் வேறில்லை என்பது எந்த யோக்கியனுக்கும் படாமல் போகாது.

தவிர, பார்ப்பனரல்லாதார் கட்சியில் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்பதற்கு பார்ப்பனர்களை சேர்த்துக்கொள்ளக்கூடாது என்கிற கொள்கையோடு இது ஏற்பட்டு பத்து வருஷம் ஆன பின்பு இப்போது இவர்களுக்கு இந்த ஞானம் தோன்றுவானேன்.

பார்ப்பனரல்லாதார் கட்சிக்கு தேசத்தில் செல்வாக்கு வந்துவிட்டது. அதை அழிக்க பார்ப்பனர்களும் அவர்களது அடிமைகளும் செய்த முயற்சிகளின் யோக்கியதைகளை எல்லாம் மக்கள் அறிந்து விட்டார்கள் என்கிற எண்ணம் பார்ப்பனர்களுக்குப் பட்டவுடன் பல பார்ப்பனரல்லாத கட்சியில் உள்ள ஆசாமிகளை ஏமாற்றி உள்ளே வந்து நுழைந்து அதைக் கெடுக்க முயல்வதில் பலனாக இந்த எண்ணம் சில மேதாவிகளுக்கு உண்டாக்கப்பட்டு வருகிறதே அல்லாமல் வேறென்ன? தவிர பார்ப்பனர்கள் தங்கள் ஆதிக்கத்திற்கு என்று ஏற்படுத்திக் கொண்டிருக்கும் இயக்கங்களில் பார்ப்பனரல்லாதாரை சேர்த்துக் கொள்ளுகிறார்களா? "பிராமண தர்ம பரிபாலன சபை" என்கிற பார்ப்பன சபைகளில் எத்தனை பார்ப்பனரல்லாதாரை பார்ப்பனர்கள் சேர்த்துக் கொண்டிருக்கிறார்கள் என்று இவர்கள் சொல்ல முடியுமா?

டாக்டர் சுப்பராயன் அவர்களுக்கு மந்திரி பதவி முதல் பிரைஸ் விழுந்த உடனே ஸ்ரீமான் டி. ஏ. ராமலிங்கம் செட்டியார் நாக்கில் தண்ணீர் ஊற ஆரம்பித்துவிட்டது. அன்று முதல் இன்று வரை இனியும் தனக்கு மந்திரி பிரைஸ் விழுக என்ன தந்திரம் செய்யலாம் என்பதே அவருடைய கருத்தாகிவிட்டது அதற்கு ஏற்றாப் போல் சர். சி. பி. என்கிற ஒரு பார்ப்பனர் ஸ்ரீமான் ராமலிங்க செட்டியாருக்கு சிநேகிதர் போலவேஷம் போட்டதும் நாய்க்கு கள்ளு வார்த்தது போல் ஸ்ரீமான் செட்டியார் தன்னைப்பற்றி மகா பிரமாதமாய் எண்ணிக் கொள்ள நேர்ந்து விட்டது.

போதாக்குறைக்கு இந்த சர். சி. பி. சினேகத்தை நிஜம் என்று எண்ணிய பல ஆங்கில நாகரீக துடியானவர்களுக்கும் செட்டியாரிடம் ஒரு மோகமுண்டாய் விட்டது. இவைகளின் பலனாய் ஸ்ரீமான் செட்டியார் ஒரு தனிக்கட்சி ஏற்படுத்த அநேகருக்கு தனிக் கடிதம் எழுதிவிட்டார். ஸ்ரீமான் கேசவ பிள்ளைக்கு எழுதினாராம். சர் சங்கர நாயருக்கு எழுதினாராம் இன்னும் பலருக்கும் எழுதினாராம். ஆனால் அநேகர் அதை ஒப்புக்கொள்ளவில்லை என்பதாகவே தெரிகிறது. சிலர் சுவற்றின்மேல் பூனைபோல் இருக்கிறார்கள். முடிவு என்ன ஆகும் என்பது இப்போதே நமக்குத் தெரியும். அதாவது பார்ப்பனர்களில் ஸ்ரீமான் எஸ். ஸ்ரீநிவாசய்யங்கார் ஒரு காரியத்தில் பிரவேசித்தால் என்ன பலன் அடைவாரோ அதே மாதிரி தான் பார்ப்பனர் அல்லாதாரில் நமது ஸ்ரீமான் ராமலிங்கம் செட்டியார் அவர்களின் கைகாரியமும் என்பது நமது தீர்மானம். ஆனபோதிலும் ஒரு சிலருடைய சுயநலத்திற்கு ஆகவேண்டி யாரை வேண்டுமானாலும் எந்தக்கொள்கையை வேண்டுமானாலும் பலி கொடுக்கவும் எவ்வளவு பொறுப்புள்ள இயக்கத்தையும் அதன் பலனையும் ஒழிக்கவும் மக்கள் எவ்வளவு சுலபத்தில் துணிந்து விடுகிறார்கள் என்பதை பொது ஜனங்கள் அறிவதற்கு இதை எழுதினோமே ஒழிய வேறில்லை.

# செல்வபதி செட்டியார்

## "எல்லாவகையிலும் தகுந்தவர்"

அகில இந்தியத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுக் காரியதரிசி ஸ்ரீமான் என். எம். ஜோஷி எம். எல். ஏ., சென்னைத் தொழிலாளர் சங்கத்தின் ஆதரவில் நடந்த ஒரு பொதுக் கூட்டத்தில் கூறியதாவது:—

"இச்சங்கத்தார் தங்கள் காரியதரிசிகளில் ஒருவரான ஸ்ரீமான் ஜி. செல்வபதி செட்டியாரை. சென்னைநகர சபைக்குப் பெரம்பூர் டிவிஷன் அபேக்ஷகராக நிறுத்தியிருப்பது குறித்து நான் பெருமகிழ்ச்சியடைகிறேன். சங்கத்தின் நற்காலத்திலும் சரி, கஷ்டகாலத்திலும் சரி, அவர் சங்கத்துக்காக உறுதியுடன் உழைத்து வந்திருக்கிறார். எனவே அவர் எல்லா வகையிலும் அபேக்ஷகராக நிற்கத் தகுதி வாய்ந்தவர் என்பதில் எள்ளளவும் சந்தேகமிருக்க முடியாது. இனிமேல், தொழிலாளர், பொது ஸ்தாபனங்களில் தங்கள் சொந்த மனிதர்களைக்கொண்டே பிரதிநிதித்துவம் பெறவேண்டும். வெளியாரின் ஆதரவை நம்பியிருப்பதில் பயனில்லை. தேர்தலில் ஸ்ரீமான் செல்வபதி செட்டியார் வெற்றி மாலை சூடுவார் என்று நான் நிச்சயமாக நம்புகிறேன். அவருடைய வெற்றி சங்கத்தின் வெற்றியாகும். பெரம்பூர் டிவிஷன் பிரதிநிதியாக இதுவரை அந்த டிவிஷன்வாசி எவரும் இருந்ததில்லையென்று தெரிகிறபடியால், பெரம்பூர் டிவிஷனுக்கும் அவருடைய வெற்றி சிறப்பைத்தருவதாகும்."

அகில இந்திய ரயில்வே தொழிலாளர் ஸ்தாபனத்தின் தலைவரான ஸ்ரீமான் வி. வி. கிரி, மேற்கண்ட அபிப்பிராயத்தை மனப்பூர்வமாக ஆதரித்தார். நகரிலுள்ள எல்லாத்தொழிற்சங்கங்களும் அகில இந்தியத் தொழிலாளர் காங்கிரஸின் மாகாணக்கமிட்டியும் உத்தியோக முறையில் ஸ்ரீமான் செல்வபதி செட்டியாருக்கு ஆதரவளித்து அவருக்கு நிச்சயம் வெற்றி கிடைக்குமாறு செய்யவேண்டுமென அவர் அபிப்பிராயப்பட்டார்,

(நவசக்தி)

# திருவண்ணாமலை கோயில் வழக்கு.

திரு. கண்ணப்பர் விசாரிக்கப்பட்டார்

திருவண்ணாமலை ஜூலை 23

'திராவிடன்' ஆசிரியர் திரு. ஜே. எஸ். கண்ணப்பாவர்கள் கோயில்மானேஜர் திரு. இராமநாத சாஸ்திரி, பட்டர் குப்புசாமி குருக்கள், டிரஸ்டி வேங்கடாசலம் செட்டியார் முதலிய மூவர்மீது கொடுத்திருந்த வழக்கு 21-7-27ல் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

வாதி திரு. ஜே. எஸ். கண்ணப்பருக்கு வேலூர் வக்கீல் திரு. வி. எஸ். பத்மநாப முதலியார் ஆஜரானார், எதிரிகளுக்கு எஸ். வி. விஜயராகவாச்சாரியார் அவர்களும் திரு. டி. ஆர். இராமசாமி ஐயரவர்களும் ஆஜரானார்கள்.

வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டதும், திரு. எஸ். வி. விஜயராகவாச்சாரியர் வாதியைக் கடைசியில் குறுக்கு விசாரணை செய்ய இடம் கொடுக்கவேண்டுமென்று மனு ஒன்று செய்து கொண்டார். அம்மனு மாஜிஸ்டிரேட்டால், இருபக்கமும் நீண்ட வாதம் நடந்த பின்பு தள்ளுபடி செய்யப்பட்டது.

கண்ணப்பரின் சாட்சியம்.

திரு. கண்ணப்பர் திரு. வி. எஸ். பத்மநாப முதலியாரால் முதலில் விசாரிக்கப்பட்டார்.

அவர் சாட்சியத்தின் சுருக்கம் பின் வருமாறு:— நான் "திராவிடன்" ஆசிரியர். ஜாதியில் நாயுடு. ஆகையால் எனக்குத் திருவண்ணாமலை கோயிக்குள் போய் சுவாமி தரிசனம் செய்ய உரிமை உண்டு. நான் திருவண்ணாமலைக்கு 6-2-27ல் தென்னிந்திய நலவுரிமை சங்கமொன்று திறக்க வந்தேன். 7-2-27 ல் பிராமணரல்லாதார் இளைஞர் சங்கம் திறப்பு விழாவில் ஒரு பிரசங்கம் செய்தேன். கூட்டம் முடியவும் சுமார் 8½ மணிக்கு நானும் முதல் 9 சாட்சிகளும் கோயிலுக்குச் சென்றோம் நாங்கள் கிளிகோபுரம் அணுகவும் கிளி கோபுரக் கதவுகள் 1-வது எதிரியாலும் 2-வது எதிரிபோல் இருந்த ஒருவராலும் நாங்கள் நுழைய முடியாத படி சாத்தப்பட்டன. என்னுடன் வந்த ஆறாவது சாட்சியாகிய திரு. கோபால் பிள்ளை என்ற சர்க்கில் இன்ஸ்பெக்டர் கோயில் ஜவானை விட்டுக் கதவு திறக்கும்படியாய்ச் செய்தார். நாங்கள் உள் நுழைந்ததும் 1, 2 எதிரிகள் ஓடிப்போய் சாமி சந்நிதியைச் சாத்திக்கொண்டார்கள். நான் போலீஸ் சர்க்கில் இன்ஸ்பெக்டரிடம் முறையிட்டுக்கொண்டேன். அவர் நீங்கள் பிரகாரம் சுற்றி வாருங்கள். அதற்குள் நான் கதவு திறக்கும்படியாகச் செய்கின்றேன் என்றார். அப்படியே சுற்றி வந்தோம். அம்மன் சந்நிதி அருகே வரவும் அம்மன் சந்நிதியைச் சாத்திக் கொண்டிருந்தார் பிறகு நாங்கள் சாமி சந்நிதியை அடைந்தோம். கோயில் கதவு மூடப்பட்டு தான் இருந்தது போலீஸ் சர்க்கில் இன்ஸ்பெக்டர், வந்திருப்பவர்களெல்லாம் நாயுடுகள் முதலியார்கள் செட்டியார்கள் எல்லோரும் இந்துக்கள் கதவு திறங்கள், என்று உள்ளே இருப்போருக்கு எடுத்துச் சொன்னார் சொல்லியும் கதவு திறக்கப் படவில்லை. உடனே போலீஸ் இன்ஸ்பெக்டர் ஒரு கோயில் சேவகனையும் பிராசிகியூட்டிங் சப் இன்ஸ்பெக்டர் திரு சிவப்பிரகாசம் முதலியாரையும் லோக்கல் டிரஸ்டியாய வேட்டவலம் ஜெமீன்தாரிடம் அனுப்பினார் ஜமீன்தார் ஒரு பிராமண குமஸ்தாவிடம் கதவைத் திறக்கும்படி சொல்லியனுப்பினார், இக்குமஸ்தா சொல்லியும் கதவுகள் திறக்கப்படவில்லை. 1-மணி நேரம் இருந்து பார்த்துக் கதவு திறக்கப் படாமையால் நாங்கள் 9-30 மணிக்கு வீடு வந்து சேர்ந்தோம். 3-வது எதிரி எக்ஸிகியூட்டிவ் டிரஸ்டி. இவர் தந்தியின் பேரில் தான் நான் கோயிலுக்குள் வரமுடியாதபடி கதவுகள் அடைக்கப்பட்டதாய்க் கேள்விப் பட்டேன். மற்றும் கோயிலுக்குள் நடக்கும் ஒவ்வொரு அக்கிரமத்துக்கும் டிரஸ்டி ஜவாப்தாரி.

நான் ஜஸ்டிஸ் கட்சியைச் சேர்ந்தவன். ஜஸ்டிஸ் கட்சியின் கொள்கை சுயராஜ்யம் பெற வேண்டுமென்பது. சுயராஜ்யம் பெறுவதற்கு இப்பொழுது பிராமணர்கள் எதிரிடையாய் இருக்கின்றார்கள். ஆகையால் இவர்கள் கொட்டத்தை ஒழிக்கவேண்டும். இனிப்பிராமணர்கள் நாம் படிக்கக்கூடாது. என்று எழுதிவைத்திருக்கிறார்கள், மற்றும் உத்தியோகங்களெல்லாம் பிராமணமயமாய் இருக்கின்றது. ஆகையால் உத்தியோகங்களில் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் வேண்டும். பிராமணன் தன்னை பிர்மாவின் முகத்திலிருந்து பிறந்தவன் என்று எழுதி வைத்துக்கொண்டு அகங்கரித்து தான் உயர்ந்தவன் என்றும், மற்றவர்கள் தாழ்ந்தவர்கள் என்றும் சொல்லுகின்றான். இந்த சாதி வித்தியாசம் அடியோடு ஒழியவேண்டும். இனிக் கோயிலில் பிராமணர்களுக்கு நுழைய உரிமை இல்லை அவர்களெல்லாம் தாமே கடவுள் என்றிடும் சங்கராச்சாரியார் மதத்தைச் சார்ந்தவர்கள். கோயில்களில் பிராமணர்களைத் தவிர இந்துக்களென்று சொல்லும் மற்ற எல்லோருக்கும் நுழைய உரிமையுண்டு. கோயில்களில் கடவுளுக்கும் பக்தர்களுக்கும் இடையே தரகர்களாகிய குருக்கள் வேண்டியதில்லை. பிராமணரல்லாதார் தம் வீட்டில் நடக்கும் கலியாணம் சிரார்த்தங்களில் பிராமணப் புரோகிதர்களை பகிஷ்கரிக்க வேண்டும். இக்கொள்கைகளை நான் பத்திரிகையில் எழுதி வருவதோடு பிரசங்கம் செய்தும் வருகின்றேன். ஆகவே இத்தகைய கொள்கையுடைய என்னை அவமானப் படுத்தவேண்டுமென்று கோயிலுக்குள் நுழையாதபடி கதவுகள் சாத்தப்பட்டன.

குறுக்கு விசாரணை.

பிறகு, திரு. வாதி கண்ணப்பர், திரு எஸ். வி. விஜயராகவாச்சாரியாரால் குறுக்கு விசாரணை செய்யப்பட்டார் அதன் சுருக்கம்:—நான் வைஷ்ணவன், திருமாலை முழுமுதற் கடவுளாகக்கொள்வது வைஷ்ணவமதம். எனக்கு வைஷ்ணவ மதத்தின் கொள்கைகள் நன்றாய்த் தெரியும். வைஷ்ணவர்கள் சிவன் கோயிலுக்குச் செல்ல உரிமையுண்டு. சிவன் கோயிலுக்குச்செல்லும் வைணவர்கள் குளிக்கவேண்டுமென்று சொல்லுவோர் பைத்தியக்காரர்கள். வைணவர்கள் சிவன் கோயிலுக்குச் செல்லுகின்றார்கள். நான் நாயுடு ஆனால் என் பெயருக்கு முன்னால் நாயுடு என்ற வாலைச் சேர்த்துக் கொள்வதில்லை. நான் நாயுடு என்று பத்திரிகைகளில் வெளிவந்துள்ளன. நான் நாயுடுவானதால் இரு முறை வெலம நாயுடு மகா நாட்டில் தலைமை வகித்துள்ளேன். கோயமுத்தூர் நாயுடு மகாநாட்டுக்குப் பிரதிநிதியாய்ச் சென்றுள்ளேன். நான் இந்து என்பது எதிரிகளுக்குத் தெரியுமோ தெரியாதோ அதை நான் சொல்ல முடியாது. நான் நாமம் போட்டுக்கொள்வது வழக்கமில்லை. சோக்காய் இருக்கும் காலத்து குங்குமப் பொட்டு வைத்துக்கொள்வேன். நான் இதற்கு முன் திருவண்ணாமலைக்கு வந்தது கிடையாது. இதற்குமுன் இக்கோயிலைப் பார்த்ததும் கிடையாது. எல்லா இந்துக்களுக்கும் கோயிலுக்குள் போக உரிமையுண்டு. நானும் இந்துவாகையால் எனக்கும் போவதற்கு உரிமையுண்டு. நான் 6-2-27 திருவண்ணாமலை வந்தேன். வந்த பிறபாடு தான் எனக்குச் சாட்சிகளைத் தெரியும். நான கோயிலுக்குள் போகும் போது பல பக்தர்கள் உள்ளேயிருந்தார்கள். அவர்களெல்லாம் இந்துக்களா அல்லவா வென்பது எனக்குத் தெரியாது. என் கூட வந்தவர்களெல்லாம் இந்துக்களே! என்னுடன் வந்த போலீஸ் சர்கில் இன்ஸ்பெக்டரும், பிராசிகியூட்டிங் இன்ஸ்பெக்டரும் உத்தியோக உடையில் இல்லை. அவர்களை நான் கூப்பிட்டு வரவில்லை. இரவு 8-15 மணிக்கு நான் பிரசங்கத்தை முடித்தேன். என் பிரசங்கத்துக்கு சர்கில் இன்ஸ்பெக்டரும் பிராசிகியூஷன் இன்பெக்டரும் வந்திருந்தார்கள். நான் பிராமணரல்லாதார் இளைஞர் இயக்கத்தைப் பற்றிப் பேசினேன். நான் அன்று தீண்டாமை ஒழிய வேண்டுமென்றும், சாதி வேற்றுமை போகவேண்டுமென்றும் பேசினேன் 6—2—27 ல் நான் திருவண்ணாமலைக்குத் தென்னிந்திய நலவுரிமைச்சங்கம் திறப்பு விழாவுக்கு வந்தேன். அன்று நானும் திரு. ஈ. வெ. இராமசாமி நாயக்கர், ஆரியா, டிரிலசை, முருகேசம் முதலியவர்கள் பேசினோம். சுரேந்திரநாத் ஆரியா கிருஸ்தவர். நாங்கள் கோயிலுக்குப் போவதற்கு முன்பு அவர் கிளி கோபுரத்துக்கு வெளியே நின்று கொண்டிருந்தார். அவரைக் கண்டு பேசினேன் அவர் தாம் மின்சார விளக்குகளைப் பார்க்க வந்திருப்பதாய்த் தெரிவித்தார். கதவு ஆரியாவுக்காக சாத்தப்படவில்லை. எனக்காகத்தான் சாத்தப்பட்டது. என்னுடைய சொந்த அபிப்பிராயம் கிருஸ்தவர்கள் கோயிலுக்குள் வரலாமென்பது. ஆனால் பெரும்பான்மையான இந்து மதத்தினருடைய அபிப்பிராயம் எப்படியிருக்குமென்று சொல்லமுடியாது. என்னுடன் கோயிலுக்குள் வந்தவர்களுள் ஆதிதிராவிடர்கள் இருந்தார்களென்றும் நான் சொல்ல முடியாது. கோயிலில் கடவுளுக்கும் நமக்கும் இடையே தரகர

குருக்கள் கூடாதென்பது என் அபிப்பிராயம். கோயில்களில் தேங்காய் நாமே உடைக்கவேண்டுமென்பது என் அபிப்பிராயம். ஜஸ்டிஸ் கட்சியாரின் கொள்கைகளில் கோயிலில் கடவுளுக்கும் பக்தர்கட்கும் இடையே தரகர்களாய்ப் புரோகிதர்கள் இருக்கக் கூடாதென்பது ஒரு கொள்கையாகும். தென்னிந்திய நலவுரிமைச் சங்கம் ஜஸ்டிஸ் கட்சியின் அரசியல் ஸ்தாபனமாகும். "திராவிடன்" ஜஸ்டிஸ் கட்சியாரின் கொள்கைகளைப் பரப்புகிறது. நான் என் பத்திரிகைகளில் கோயிலில் எல்லோரும் நுழைய உரிமை உண்டு, ஜாதி வித்தியாசம் ஒழிக்கவேண்டும், கடவுளுக்கும் பக்தர்களுக்கும் இடையே தரகர் கூடாது என்ற கொள்கைகளை இடைவிடாது எழுதி வந்திருக்கின்றேன். திரு. ஜே. என். இராமநாதன் ஜஸ்டிஸ் கட்சி தொண்டர்களில் ஒருவர். நான் மதுரையில் திரு. இராமநாதன் செய்த செய்கையை என் பத்திரிகையில் ஓர் தலையங்கத்தில் ஆதரித்து இருக்கின்றேன். நான் சுமார் 500 கோயில்களுக்குச் சென்றிருக்கின்றேன். சாமிக்குத் தேங்காய் நான் உடைப்பதில்லை. இது வீண் செலவு. சில கோயில்களில் நேரிலேயே பக்தர்கள் தேங்காய் உடைப்பது உண்டு. என்னுடன் வந்தவர் ஒருவரும் தேங்காய் கொண்டுவரவில்லை. சுவாமி இருக்கும் கர்ப்பக் கிருகத்துள் யாரும் செல்லவேண்டியதில்லை. ஏனெனில் அங்கு நகைகள் இருக்கின்றன. இந்துக்கள் என்று சொல்லிக்கொள்ளும் ஒவ்வொருவரும் கோயிலுக்குள் எவ்விடத்தும் செல்லலாம். சுவாமிமேல் நகையில்லாமல் போனால் கர்ப்ப கிருகத்துள்ளும் போகலாம். எல்லோரும் சுவாமியைத் தொடலாம். தொட்டு தேங்காய் உடைக்கலாம். பிராமணர்கள் எவ்வளவு தூரம் போகலாமோ அவ்வளவு தூரம் எல்லோரும் போகலாம். மதுரை மகாநாட்டில் கோயிலில் எல்லோரும் நுழையலாமென்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. திருவண்ணாமலையிலும் மதுரைத் தீர்மானங்களை நிறைவேற்றப்பட்டன. திரு. ஜே. என். இராமநாதனை ஆதரித்தும் எத்தாப்பூர் பிராமணரல்லாதாரைப் போற்றியும் திருவண்ணாமலையில் தீர்மானங்கள் செய்யப்பட்டன.

நான் ஆதிதிராவிடர்கள் வீட்டில் பல முறை சாப்பிட்டு இருக்கிறேன் இதனால் கோயிலுக்குள் செல்லுவதற்கு எனக்குள்ள உரிமை போகவில்லை ஸ்பென்சர் ஹோட்டலில் சாப்பிட்டு, எத்தனையோ பிராமணர்கள் தங்கள் ஜாதியை இழக்கவில்லை. நான் பிரசங்கம் செய்ததினால் தான் 1, 2 எதிரிகள் கதவை அடைத்தார்கள்.

குறுக்கு விசாரணை முடியவில்லை. மணி 5-20 ஆகி விட்டபடியால், கோர்ட்டு கலைந்தது. வழக்கு 6—8—27-ல் வாய்தா போடப்பட்டிருக்கின்றது. அன்று திரு. கண்ணப்பர் குறுக்கு விசாரணை செய்யப்படுவார். கோர்ட்டு மண்டபம் முழுதும் மக்கள் நிரம்பியிருந்தார்கள்.

"திராவிடன்."

---

# கனம். சர். சிவஸ்வாமி ஐயரவர்களின் மனுதர்ம சாஸ்திரம்.

(ஒரு சீர்திருத்தக்காரர் எழுதுகிறார்.)

கனம் சிவஸ்வாமி ஐயரவர்கள் 'ஹூ இந்தியா' பத்திரிகையிலெழுதிய வியாசத்தை 4-8-27-உ "சுதேசமித்திரன்" மொழிபெயர்த்தெழுதிய வியாசத்தில் கண்டிருக்கிற விஷயத்தை வாசித்தப் படிப்பவர்களுக்கு சர். சிவசாமி இக்கலிகால மனுதர்ம ஸ்தாபனம் செய்யத் தோன்றினாரோவென தோன்றுமற்போகாது. எப்படியெனில் பார்ப்பன ஆதிக்கமுள்ள மௌடீக காலத்தில்தான் பார்ப்பனனின் கூத்தி வயிற்றின் பிள்ளை சூத்திரன் என்றும், சூத்திரன் எனறழைக்கிறவொருவனின் பெண்களையோ செல்வங்களையோ பார்ப்பனனென்று சொல்பவன் இச்சித்தால் இந்தச் சூத்திரனென்பான் யாதொரு தடையும் சொல்லாது கொடுத்துவிடவேண்டும், இல்லையேல் பார்ப்பனனென்போன் பலாத்காரமாய் அபகரித்துக்கொள்ளலாம் என்றும், எழுதிவைத்திருக்கும் ஓர் கொடிய சட்டமாகிய மனுதர்ம சாஸ்திரத்திற்கு நமது கனம் சிவஸ்வாமி ஐயரவர்களும் பிராமணரல்லாதாரியக்கம் முன்னேறுவதைப் பார்த்து இவ்வளவு பதுங்கியிருந்து இப்போது வேறு வேடங்கொண்டு சர்க்காருக்கு உதவிசெய்வதுபோல சில ருத்ராக்ஷப் பூனைபோல் நாமமகூற வருபவர் போல் சட்டத்தின் பெயரால் ஓர் பாய்ச்சல் பாய்கிறார் அதன் கருத்து:- பழைய மனுதர்ம சாஸ்திரமாகிய கட்டடத்தின் அஸ்திவாரச்சுவற்றில் உப்பு அரித்து துர்ப்பலமாகிறதைக் கண்டு ரிப்பேர் செய்பவரைப்போல் வெறு நயவஞ்சக வசனங்களாகிற பூச்சுகளால் ரிப்பேர் செய்து இன்னம் பலப்படுத்தி பிராமணரல்லாதாரியக்கத்தின் முன்னேற்றத்திற்கு தடைசெய்யப் பார்க்கிறார் என்பது விளங்காமல் போகாது.

"பத்திரிகையிலோ அல்லது வேறுவழியிலோ ஒருவன் கண்மூடித்தனமாக மதஸ்தாபகரைத் தூஷித்துவிட்டால் அதனால் அவர்களின் அந்தஸ்து குறைந்துவிடாது. யார் அவர்விஷயத்தில் மதிப்பு வைத்திருக்கிறார்களோ அவர்களின் மனம் புண்படுவதைக்குறித்தே எதாவது சட்டத்தில் ஒரு மாறுதல் செய்யவேண்டுமே ஒழிய மதஸ்தாபகர்களாகிய பெரியோரின் அந்தஸ்துக்கு பங்கம்வராமல் காப்பதற்குத் திருத்தம் செய்வதென்பது கூடாது என்றும்"

"எந்த வகுப்பினரின் மனதையாவது புண்படுத்தும் நோக்கத்துடன் ஒரு மதஸ்தாபகரையோ, தெய்வத்தையோ, குருமார்களையோ தூஷித்தாலும் பத்திரிகையில் தூஷித்தெழுதினாலும்சரி அவர்களுக்கு 2 வருடத்திற்கதிகப்படாத தண்டனையாவது அபராதமாவது அல்லது இரண்டுமாவது விதிக்கப்படும் எனப் பிரிவைப் புதிதாகச்சேர்க்கவேண்டுமென்பதே எனதபிப்ராயம்" என்று எழுதி இருக்கிறார் இந்தப்படி அவ அபிப்ராயப்படுவதேயானால் உலகத்தில் மதுவருந்தும் ஓர் சாரார் இருந்துவருகிறார்கள். அதுபோலவே வியசாரம் செய்யும் ஓர் சாரார் இருந்துவருகிறார்கள், ஒருவரையொருவர் ஏமாற்றி பிழைக்கும் ஒருசாரார் இருந்துவருகிறார்கள், திருடி அடித்தும் பிடுங்கி ஜீவிக்கும் ஒருசாரார் இருந்துவருகிறார்கள், ஒருவரை ஒருவர் காலத்துக்கும் அடக்கித் தம்கீழ் குற்றேவல் செய்வித்துப் பிழைக்கும் ஒரு சாரார் இருந்து வருகிறார்கள். இப்படியே உலகில் பல மாதிரியான கெடுதல்களுக்கு இடமுள்ள அபிப்பிராயத்துடனிருப்பவைகள் அநேகங்களாகும். ஒரு அபிப்பிராயத்தைத்தான் மதம் என்று சொல்லுவது. மதிக்கப்படுவதே மதம். எவன் எதைமதிக்கிறானோ அதே மதமாகிறபோது ஒருவன் மதிப்பது நலமாகவுமிருக்கலாம் கெடுதியாகவுமிருக்கலாம். கெடுதியை விட்டு நல்லதைப் பற்ற வேண்டுமென்பதாகவும் ஒருவன் மதிக்கலாம். அவனுக்கு அது மதமாகிறது. அப்படிப்பட்ட மதத்தை நிலைநாட்ட வரும்போது கெடுதிகளின் தத்துவங்களை விரித்துரைக்கும்போதும், கெடுதி செய்து வருபவர்களுக்கு அது இனி நடக்காதென தோன்றும்போதும், அவர்கள் மனம் புண்படுவது சகஜம். அப்போது கெடுதிகளை விட்டு விடவேண்டும் என்று அதன் ஊழல்களை வெளிப்படுத்தும் போது நல்லவைகளைப் பற்றி எழுதவேண்டும் என்ற பிரசங்கவாயிலாகவோ பத்திரிகை வாயிலாகவோ பிரசாரம் செய்ய எண்ணிச் செய்கிறதும் ஒரு மதித்ததாகிய மதமாகிறது. இப்படிப்பட்ட இந்த மதத்தைக் கடைப்பிடித்தொழுகுபவர்கள் மனம்கூட புண்படும்படி நடத்தும் பிரசாரம் செய்பவரையும் தான் தண்டனை கண்டனைகளுக்குள்ளாக்கவேண்டுமென ஏற்படுகிறது. இப்படி எண்ணிறந்த பழக்கவழக்கங்களிலேற்பட்ட எண்ணிறந்த மதங்கள் நமது நாட்டில் தாண்டவமாடுவதைக் கண்டுதான் நமது கவர்ன்மெண்டார் மதசம்மந்தமான காரியங்களில் தாங்கள் பிரவேசிப்பதில்லை என்று சொல்லிவிட்டார்கள்போலும். ஏனெனில் ஒவ்வொருவனும் அவனவன் மனசாக்ஷிக்கு மாறுபடாமல் எது நல்லதென்று படுகிறதோ அதில அவனவன் நடந்துகொள்ள உரிமையுடையவன் என்பதில் யாருக்கும் ஆக்ஷேபணையிராது. அப்படி இருக்க நமது கனம் ஐயரவர்களுக்கு மட்டில் இது எப்படி சுயநலங்கருதாது பொது நலமெனக் கருதி வெளியிட்டாரென்பது எமக்குப் புரியவில்லை. உதாரணமாக பார்ப்பனர்கள் தொன்றுதொட்டு தங்களது நய வஞ்சகத்தாலும் சுய நலத்தாலும் சூத்திரனென்று ஒரு வகுப்பாரை அழைப்பதும் அந்தப்பதத்திற்கு வேசி மகன் என்றும் சோகிக்கிறவனென்றும் பொருள் சொல்லுவதும் அவைகளுக்கிசைய அவர்கள் பெண்கள்சொத்துக்களைத் தங்களுக்கு வேண்டும்போது அபகரித்துக்கொள்ளலாமென்பதோடல்லாமல் அந்தச்சூத்திரனென்போர்யாவரும் இந்தச் சுயநலக்காரர்களுக்குகலியாணம், திரட்டி, பிரசவம், காதுகுத்தல், அன்னமூட்டல், முடியிறக்கல், பள்ளியில் பயிலல் முதலியதிலிருந்து (யாத்ராதானம்) ஊர்பயணம் போவதென்றாலுங்கூட இன்னம்நோயிலும்சாந்தியென்பதின் பெயராலும் சாவவரை செத்தாலும் கூட விடாமல் திவசம்வரை வரி வசூலிப்பதோடு விடாமல் தங்கள் காலிலும் விழச்செய்து ஏமாற்றி அடக்கி வரி வசூலித்துப் பிழைத்து வருகிறார்கள். இவைகளை நினைத்த எந்த அன்னியமதஸ்தர்கள் மனந்தான் புண்ணாகாமலிருக்கும்? இத்தகைய துர்நடத்தைகளுக்கு நமது கனம் ஐயரவர்கள் ஏதாவது தண்டனை கண்டனைக்கு அபிப்பிராயப்படுகிறாரா? இதனிடத்தில் அபிப்பிராயப்படுகிறபோதல்லவா இவர் பொது நலப்பிரியரென்னலாம். அப்படிக்கில்லாமல் தற்காலத்தில பார்ப்பனக் கொடுமையிலிருந்து தப்பிப் பிழைத்துக்கொள்ளுங்களென்று யாராவது அவர்கள் அக்கிரமங்களை ருஜூப்படுத்தி மக்களுக்குச் சுயமரியாதையை புகட்ட சுயநலங்கருதாமல் வாழ்விக்க நினைத்து பத்திரிகை மூலமாகவோ பிரசங்கமூலமாகவோ பிரசாரம்செய்தால் அவர்களைக்கண்டு பொறுமல் தமது கூட்டத்திற்கு என்ன கெடுதி வந்து விடப்போகிறதோ வென்று "வெள்ளரிப் பழத்திற்கு வெண்கலப்பூண்" கட்டுபவரைப்போல் சர்க்காருக்கு ஹிதோபா

(இதன் தொடர்ச்சி 6ம் பக்கம் பார்க்க)

புதிய புருஷனுகலாம்! (பராபரமே தெய்வம்.) அதிக வாலிபம் அடையலாம்!!

நெ. 1 முதல்தரமான உயர்ந்த தாதுபுஷ்டிக்குளிகை 1 வேளையிலேயே பரீக்ஷிக்கலாம.

ராமஜெயம் ரெண்டு பங்கு! யானை பலம் ஏழு பங்கு!!
தாது புஷ்டியில் யானை பலமுடையது. தளர்ந்த கிழவனும் சாப்பிடலாம்.

எத்தனை வருடத்திய கிழவனுனும் தாது புஷ்டியில் யானைபலந்தான்.

# மதயானைக் குளிகை.

உடைந்து நீர்த்து தண்ணீராக தானே ஓடக்கூடிய தாதுவை யிறுக்கி மணியாக்கி நரம்புகள் வலுத்து இருதயம் பலப்பட்டு விடுவதால் மதங்கொண்ட யானையானது கருங்கல்லாயினும் நேர் முட்டு மூட்டித்தாக்கி நிற்பதுபோல நமது சரீரம் பராக்கிரமித்து பலாத்கார சக்தி ஏற்பட்டு மதங்கொண்ட தாது புஷ்டியை உண்டுபண்ணி ஒன்றையும் எதிர்பாராத திவீரத்தைக்கொடுக்கவல்லது.


யானைக்கொம்பும் தங்கமும் சேர்த்து தயாரித்த முதல்தர குளிகை:— அடக்க முடியாத மகா பலசக்தி வாய்ந்து நிற்பதை ஒவ்வொருவரும் அனுபவித்து அதன் குணத்தைக்கண்டு மெச்சவேண்டுமென்றெண்ணி இதன் அருமை பெருமைகளை இங்கு விரிவாக எழுதவில்லை. இது அராபு தேசத்து பக்கிரி முறை ரகஸ்யமாயுள்ளது. இந்திரிய இழிவு, துரிதஸ் கலிதம் எனும் மகாகொடிய ரோகயை வேரறுத்து நீராபீனிசம், கபம், இருமல், இளைப்பு, சுரம், அதிசாரம், குருணி, பலவித வயிற்றுப்போக்குகளை நிறுத்தி அதிசார சுரத்திற்கு சஞ்சீவிக் கொப்பானது. மற்ற விபரம் மருந்துடன் வரும். அன்னிய நாட்டினர் முன்பணம் அனுப்பவேணும்.

| | | |
|---|---|---|
| 50 குளிகை விலை | ரூ. 3 8 | எல்லாவகை குஷ்டங்களையும் சர்வரோகங்களையும் தீர்க்க தமிழ் ஆயுர்வேத மகரிஷிகளின் உயர்ந்த சகல ஔஷதங்களும் உண்டு. விரும்பினால் கேட்டால் இனமாக அனுப்புவோம். |
| 100 குளிகை விலை | ரூ. 6 0 | |

| | | |
|---|---|---|
| யானைக்கொம்பும் தங்கமும்சேர்த்த முதல்தர குளிகை 50 | ரூ. 7 8 | உலகரக்ஷகன் ஆசிரியர், |
| 100 குளிகை | ரூ, 12 0 | |

**M. கந்தசாமி பிள்ளை,**
இந்திய மஹரிஷிகள் வைத்தியசாலை, பழனி, (S. I.)

Photo Hand Camera



லண்டனில் புதிதாய்ச் செய்யப்பட்டது. எவரும் எளிதில் போட்டோ பிடிக்கலாம். போட்டோவின் அளவு $3\frac{1}{2}''$ x $2\frac{1}{2}''$ ஆகும், இந்த மெஷினை வைத்துக்கொண்டு மாதம் ரூ. 30 முதல் 200 வரை சம்பாதிக்கலாம். எல்லா சாமான்களுடனும் விவரங்களுடனும் குறைந்த விலை ரூ. 4—12—0.

Sole Agents ஸ்ரீதனம் அண்டு கம்பெனி.
பிரும்ம சமாஜம், ஜி. டி. மதராஸ்

## உறையூர் அங்கவஸ்த்திரங்கள்.

அசல் 100 ந. நூலில் தயார் செய்யப் பெற்றது. பலராலும் நன்கு மதிக்கப் பட்டது. தினப்படி உபயோகத்திற்கு "ஏற்ற" கம்பி சதா அங்கவஸ்திரங்களை உத்தியோகஸ்தர் முதல் ஏழைவரை சாதாரணமாக உபயோகிக்கலாம்.

$2\frac{1}{4}$ அகலம் 5 முழம் 1க்கு ரூ 1—10—0
ஷை சரிகை சீர் 1க்கு ரூ 1—12—0

தபால் செலவு வி. பி. வேறு

மற்றும் ஜவுளி வியாபாரிகளுக்கு வேண்டிய சரிகை போட்ட 200 நெ துப்பட்டாக்கள் முதலியனவும் கிடைக்கும் கமிஷனுக்கு சகாயமாக ஆடர்படி வாங்கி அனுப்பப்படும்.

மற்ற விபரங்களுக்கு எழுதகோருகிறோம்.

விலாசம் மானேஜர்
ஸ்ரீ சௌடாம்பிகா
ஜவுளி வர்த்தகசாலை
உறையூர் போஸ்டு
திருச்சி

## வால் கூடாது.

ஜூலை 2—3 ஆம் தேதிகளில் நிறைவேறிய கோவை மகாநாட்டின் திரு க்கூழ்ச்சிகள் என் முன்தோன்றின! கட்சிபேத மதுவுண்டு வெறி கொண்டிருந்த நம் தலைவர்கள் மயக்கந்தீர்ந்து கோவையில் எழுந்தருளினர் எனக்கண்டேன், மகிழ்ச்சியடைந்தேன்.

ஆனயும், இன்னுமொரு தீர்மானம் நிறைவேற்றியிருப்பின் என்னுடைய மகிழ்ச்சிக்கு எல்லையே இருக்காது. அதாவது, சமத்துவம் நிலவவேண்டின், தாழ்ந்தகுலத்தவரென்று சொல்லப்படுபவரின் நம்பிக்கையைப் பெறவேண்டின், "ஜாதி வேற்றுமையை ஒழிக்க இன்றுமுதல் தெ. இ. ந. உ. சங்கத்தார் முதலியார், செட்டியார், நாயுடு, நாயக்கர், பிள்ளை முதலிய பிரயோஜனமற்ற வால்களை, பெயருக்குப் பின்னால் ஒட்டிக்கொள்ளாமல் அறவே நீக்கிவிடவேண்டுமென்றும், ஒருவரை ஒருவர் என்னஜாதி, என்னகுலம், என்ன வருணம், என்ன வகுப்பு என்று கேட்பதை சகோதரபான்மைக்கு தீங்குவருமென கருதி தேசநலத்திற்காக இன்றே நிறுத்தல்வேண்டுமென்றும் இம்மகாநாடு கேட்டுக் கொள்ளுகிறது என்ற தீர்மானங்களும் நிறைவேற்றியிருக்கவேண்டும் ஆனால் இத்தீர்மானங்கள் ஞாபகமின்மையாலேயே தவறியதென்றும், ஷை தீர்மானங்களை நிறைவேறிய கோவைத் தீர்மானங்களாகவே பாவித்து சகோதரர்கள் பின்பற்றவேண்டுமென்றும் உதகமந்து பொது ஊழியக் கழகத்தலைவர் திரு. ச. தனகோபாலன் அவர்கள் எழுதுகிறார்.

---

**சர்வஜன வித்தியாசாலை 3-ம் ஆண்டு விழா**

8-8-27 திங்கட்கிழமை பிற்பகல் 4-மணிக்கு சென்னை செல்வ கிதி, மெம்பர், கனம் டி. ச. மாயர் (சி. ஐ. இ., சி. எஸ். ஐ., ஐ. சி. எஸ்.,) அவர்கள் தலைமையில் ஷை விழா நடைபெறும் அன்பர்கள் அனைவரும் வரும்படி ஷை வித்தியாசாலை மானேஜர் திரு. பி. எஸ். ஜி. ரங்கசாமி நாயுடு அவர்கள் கேட்டுக்கொள்ளுகிறார்.

## மாயவரத்தில் ஓர் மடைப்பார்ப்பான்

நாங்கள் யாத்திரை மார்க்கம் பலவிடங்கள் சென்றுகடந்த வாரம் மாயவரம் வந்தோம். கண்டறார் அ. நா. சத்திரத்தின் காரியஸ்தர் அநுமதி பெற்று அங்கு தங்கினேம். இரவு நித்திரைக்கென எங்களுக்குப் பிரத்தியேகமான விடம் ஒதுக்கித்தரப்பட்டது. மூன்றும் நாளிரவு நாங்களும் எங்கள் பெண்களும் நித்திரைக்குப் போன பின்னர் அச்சத்திரத்தின் தலைமைச் சமையற்காரப் பார்ப்பான், எங்கள் மத்தியிற் கிடந்த நாற்காலியின்மேல், சத்திரத்திற்குச்சொந்தமான வண்டி மெத்தையை விரித்துச் சயனித்துக் கொண்டிருந்தான். இதையறிந்த எனது சகோதரர் அவனிடம் "பெண்கள் படுத்திருக்குமிடத்தில் அன்னியராகிய நீர் படுப்பது சரியன்று. இரண்டு இரவும் வேறுவிடத்தில் சயனித்தவர் இன்று இங்குவரக் காரணமென்ன? நாளைக்காலையில் யாங்கள் சென்று விடுவோமாதலின் பிறகு நீர் இஷ்டம் போல் செய்யலாம் என" ச் சொன்னார் அதற்கு "நீங்கள் வேண்டுமானால் வேறு இடம் செல்லலாம்" எனப் பதில் வந்ததும், எனது சகோதரர் உடலில் இரத்தம் கொதிக்க ஆரம்பித்தது. அதை அவர் முகக்குறிப்பாலறிந்த யான், வேண்டிய சமாதானம் செய்ததோடு, இக்கு இவ்வயோக்கியப்பார்ப்பானோடு சச்சரவு செய்து கொள்வது இவனோடல்லாமல் இச்சத்திரத்தின் முதலாளிகளையும் சாருமாகையால் அவர்களை உத்தேசித்தாவது இவனை விட்டு விடுங்கள் என்று சொனனதின் மேல் ஒருவாறுகக் கோபம் தணிந்தார். இல்லையேல் அம்மடப் பார்ப்பான் நல்ல புத்தி கற்பிக்கப் பெற்றிருப்பான். அற்பனாகிய இவன் தனது அடுப்பூதும் தொழிலைகுபேர சம்பத்தாக நினைத்தானோ அல்லது, ஜனச்சக்கரவர்த்தியாகத் தன்னை எண்ணிக் கொண்டானோ என்னவோ தெரியவில்லை!

ஒழுங்கு தெரியாத புத்தியில்லாத சுயநலம் வாய்ந்த முரட்டுச்சுபாவம் அமைந்த இவ்வித போக்கிரிப் பார்ப்பனர்களை வேலையிலமர்த்துவதும், அவர்கட்குச் சத்திரத்தில் அன்னமிடுவதும் பெரும் பாவம். கூன் குருடு முதலிய அங்கப்பழுதுள்ளவர்களுக்கும், வேலை செய்து பிழைக்கச் சக்தியற்றவர்களுக்குமே சத்திரத்தில் அன்னமிடல் வேண்டுமென்பது ஆழ்ந்த அறிவுடையார் கொள்கை. உடம்பிலே வலிமையிருந்தும் உழைத்துப் பொருள் தேடாதவர்களுக்கு ஏதாவது கொடுப்பவர் அவர்கள் சோம்பேறிகளாத் திரிவதற்குப் பழியேற்பர். "பாத்திரமறிந்து பிச்சையிடு" என்ற முதுமொழியை ஆழ்ந்து சிந்திப்பார்க்கு இவ்வுண்மை புலனாகுமென கீழ்ச்சீவற்பட்டி லெ. வேங்கடாசலம் செட்டியார் எழுதுகிறார்.



பழநி சி. எம. சாமி

# குருதாம்பரபஸ்பம்

சகல வியாதிகளுக்கும் கைகண்டது,

திமிர், குஷ்டம், ரணம், சூலை, கிரந்தி, பத்து மேகம், தடிப்புகள், மாறி விட்டது ஆராத குழிபுண் ஆறிவிட்டது. இருமல் குன்மம், வெள்ளை, வெட்டை பவுத்திரம், மூலம், நீர்க்கடுப்பு, எரிச்சல் முதலிய எல்லா வியாதிகளும் தீர்ந்துவிட்டதென்று தினம்நற்சாட்சிகள் வந்த வண்ணமாயிருக்கின்றன வியாதிகளை விபரமாய் எழுதவும்.

50 நாள் 100வேளைபஸ்பமும் அனுப்பானமும் விலை ரூ. 50 25 நாள் 50 வேளை பஸ்பமும் அனுப்பானமும்விலை ரூ. 25 எழைகளுக்குப்பாதிவிலை

இனமாய் குருதாம்பரபஸ்பம் மாதிரி பாக்கெட் விரும்புவோர் 2 அணா ஸ்டாம்பு அனுப்பவும்

நற்சாட்சி:—ஒரு ஊரில் இரண்டு தீராத ரோகஸ்தர்கள் நமது குருதாம்பர பஸ்பத்தால் பூர்ண குணம போற்றுவதை கவனியுங்கள்

எமது ஊரில் உங்கள் பெயர் சூரியனைப்போல் பிரகாசிக்கிறது மேகவியாதியால் ஒன்னரை ருஷகாலமாய் படுக்கையிலிருந்தவன் குருதாம்பரபஸ்பத்தால் பூர்ணகுணமானான் மூல வியாதியால் கஷ்டப்பட்ட மற்றொருவன் பூர்ண குணமானான் ஆனதால் என் வியாதிக்குத் தகுந்த மருந்தனுப்பக் கோருகிறேன்.

A M. துரைசாமி, 80-நீ ர் மார்க்கட் ரோடு, சூளை பெங்களூர் 11—4—27

ஏராளமான நற்சாட்சிகளையும் பெரிய ஆபீஸர்களின் நற்சாட்சிகளையும் நமது கேட்லாக்கில் பார்க்கலாம்.

சித்த ஆயுள்வேத வைத்திய ஆசிரியர்,

C. மலையப்பசாமி. நித்தியானந்த வைத்தியசாலை பழனி, S. I.

சென்னை பிராஞ்சு ஆபிஸ்:- முருகன் ஏஜன்ஸி 43 அரமனைக்காரத்தெரு ஜி. டி. சென்னை


# சேலம் முனிசிபாலிட்டி.

## நோட்டீஸ்

நாளது ஆடி மீ 26-உ (10—8—27) புதன்கிழமை முதல் 29-ந் தேதி (13-8-27) சனிக்கிழமை வரையில் சேலத்தில் மாரியம்மன் திருவிழா காலத்தில் செவ்வாய்ப்பேட்டை சந்தைப்பேட்டையில் கால் நடை சந்தை கூடும். அதே சமயத்தில் சேலம் விக்டோரியா மார்க்கெட்டில் கால் நடை விவசாயம் கைத்தொழில் வகையரா காட்சியும் வைக்கப்படும், சிறந்தவைகளுக்கு பரிசுகள் அளிக்கப்படும். உயர்ந்த கால் நடைகளையும் கைத்தொழில வகையரா சாமான்களையும் அச்சமயம் கொண்டுவரவேணுமாய்க் கோரப்படுகிறது.

S. தம்மண்ண செட்டியார்,
சேர்மேன்.


13-ம் வருடம பிறந்து விட்டது. 13-ம் வருடம் பிறந்து விட்டது

# 'ஆனந்தபோதினி".

ஓர் உயர்தர தமிழ் மாதப் பத்திரிகை.

48-பக்கங்களில் உயர்ந்த வியாசங்களுடன் வெளிவருவது.

தமிழ் நாட்டில் உள்ள மாத சஞ்சிகைகளில் முதன்மை பெற்றது.

13-வருடங்களாக நடைபெற்றுவருவது

20,000 சந்தாதாரர்களையுடையது. எல்லோரும் படிக்கத்தக்கது

இந்தியா, பர்மா, சிலோன் ஆகிய உள்நாடுகளுக்கு வருட சந்தா ரூ. 1—0—0

பினாங்கு, சிங்கபூர், கொட்டால் முதலிய வெளி நாடுகளுக்கு

வருட சந்தா ரூபாய் 1—4—0 மாதிரிக் காப்பி இனம்.

விலாசம்:—ஆனந்தபோதினி ஆபீஸ்,
கெ. 6, வெங்கடேச மேஸ்திரி தெரு, மதராஸ்

இனம்! இனம்

முனையில் இரிடியம் உள்ள 14 Kt. தங்க நிப்பு போட்ட Self-filling பௌண்டன்பேனா இனம்.



எங்கள் 18 காரட் ரோல்டு கோல்டு பின்புறம் விசித்திர வேலை செய்யப்பட்ட லீவர் பாக்கெட் கெடியாரம் வாங்குகிறவர்களுக்கு மேலேசொல்லியபடி பௌண்டன் பேனாஇனமாய் அனுப்பப்படும. கடியாரம் விலை ரூ. 4-12-0. 5வருஷம் உத்தரவாதம். உடனே எழுதுங்கள்.

CANADIAN WATCH PEOPLE
George Town, Madras.


## திருச்சி சுயமரியாதை நாடகம்.

டி நாடக டிக்கட்டுகளை விற்றுக்கொடுப்பதாக வாங்கிச்சென்ற அன்பர்களிற் சிலர் விற்ற டிக்கட்டுக்கு பணம் அனுப்பாமலும், விற்காத டிக்கட்டுகளை வாபீஸ் செய்யாமலும் இருப்பதால் கணக்கு முடிக்க தவக்கமாயிருக்கிறதென்றும், ஆகையால் டி அன்பர்கள் உடனே தொகையையும் டிக்கட்டுகளையும் அனுப்பிவைக்கவேண்டுமென்றும், அப்படி அனுப்பினவுடன் கணக்கு முடித்து செலவு நீக்கி மீதித்தொகையை 'திராவிடன்' பத்திரிகை வளர்ச்சிக்கு கொடுப்பதாகவும், அப்பொழுது கணக்குகளின் விபரம் பத்திரிகைகளுக்கு அனுப்பப்படும்என்றும்ஜூபிலி சங்கத்தலைவரும் காரியதரிசியும் எழுதுகிறார்கள்.

## தஞ்சாவூர்

25—7—27ந் தேதி நடந்த எலக்ஷனில் தஞ்சாவூர் முனிசிபல் கவுன்சிலர் திரு, ஐ. குமாரசாமி பிள்ளை அவர்கள் சென்னை யுனிவர்சிட்டி செனட் சபைக்கு மெம்பராக தஞ்சை ஜில்லாவிலுள்ள முனிசிபல் கவுன்சிலர்களால் தெரிந்தெடுக்கப்பட்டார் என ஒரு நிருபர் அறிவிக்கிறார்.

### பார்ப்பன புரோகித பகிஷ்காரம்:—

காஞ்சீபுரம் தாலூகா இளையனார்வேலூர் கிராமத்திலிருக்கும் கோவிந்தசாமி முதலியார் என்பவருடைய சுவிகார தகப்பனார். க. முருகப்ப முதலியார் என்பவருக்கு ஆடி மாதம் 16 தேதி வந்த சிராத்தம் சுயநல புரோகித பார்ப்பனர்களை நீக்கி தனது பந்து மித்திரான் சகிதம் வெகு விமரிசையாய் நடந்தேறியதென்று இ. வெ. ம. கா. வா. உதவி காரியதரிசிஎழுதுகிறார்.


# கணித சோதிடம்

பாகித கணிதப்படி கணிதஞ்செய்து பலன்கள் கூறப்படும். ஒரு வருஷத்திற்கு மாதவாரி பலன்கள் நுட்பமாயும் விவரமாயும் எழுதி அனுப்ப ரூபாய் இரண்டு. ஆரூடம் 5 கேள்விகளுக்கு விவரமான பதில் எழுதி அனுப்ப ரூபாய் ஒன்று. விவாக விஷயம் ரூபாய் ஒன்று. விவாக விஷயத்தைப்பற்றி நாங்கள் எழுதி அனுப்புவதைக்கொண்டு பெண்ணுக்குப் புருஷனும், புருஷனுக்குப் பெண்ணும் இன்னாரென்று வெகு சுலபமாய் நிச்சயக்கலாம். எங்களிடம் அருமையான பூர்வீக சோதிட நூற்கள் பலவுள்ளதால் நாங்கள் எழுதி அனுப்பும் பலன்கள் பொதுப்பலன்களாயிராமல் விவரமாகவும் சாஸ்திரீகமாகவுமிருக்கும். உங்கள் ஜாதக நகலாவது கடிதம் எழுதும் நேரத்தையாவது தெரிவியுங்கள்.

தே. ஆறுமுக செட்டி,
முதலியார் பேட்டை, புதுச்சேரி-

இப்பழனியில் அநேக நற்சாட்சிகளும், தங்க மெடல்களும் பரிசுகளும் பெற்று நீராசென கைவிடப்பட்டவியாதிகளை எல்லாம் சௌக்கியம் செய்த நமது முதல்தரமான தேவ அவுஷதங்கள்.



பாலாம்பிகை டிரேட் மார்க்

# முதல் நெம்பர் தங்க பற்பம்.

## தாது புஷ்டிக்கு நிகரற்றது!!!

அதிக வயதாலும், பலஹீனத்தாலும் பலவித துர் அப்பியாசத்தாலும் சோர்ந்து போனதும் இழந்து போனதுமான ஆண்மையைக் கெட்டிப்படுத்தி சப்த தாதுக்களுக்கும் வலுக்கொடுத்து இல்வாழ்க்கையில் அதிகஇன்பத்தை உண்டுபண்ணி புத்திர சந்தானத்தை கொடுப்பதில் இதற்கு மிஞ்சின ஔஷதம் இல்லை. பரீக்ஷைக்கும் பலனுக்கும் உத்திரவாதம். தங்க பற்பத்தை மகா வில்வாதி லேகியத்துடன் அநுபானமாகச் சேர்த்துச் சாப்பிட வேண்டும்.

முதல் நெம்பர் பற்பம் 50-நாள் விலை ரூபாய் 36—0—0
இரண்டாம் நெம்பர் பற்பம் 50 நாள் விலை 20—0—0
மேற்படி 25-நாள் விலை 10—0—0
அநுபானத்துக்கு மகாவில்வாதி லேகியம் 1 டின் ரூ. 10—0—0
[தபால் சார்ஜ் பிரத்தியோகம்]

# அசல் வெள்ளி பற்பம்

## பரீட்சைக்கும் பலனுக்கும் உத்திரவாதம்

நமது அசல் வெள்ளி பஸ்பம் நாட்பட்ட அஸ்தி வெட்டை நீரோடு இந்திரியம் உடைந்து விழுதல் அதில் ஈ, எறும்பு மொய்த்தல், சிணுக்கிரும் பல், தும்மல் விழுதல் வெட்டை வாய்வு இடுப்பில் வாய்வு தங்கியிருத்தல், திரேகம் இளைத்து சதா காலம் ஜுரம்போல் சூடு தாங்கி யிருத்தல் கால் கை கண் முதலான இடங்களில் எரிச்சல் உண்டாகி தலைமாற்றி சுற்றல் இவைகள் கண்டிப்பாய் நிவர்த்தியாகும் திரேகத்திற்கு நல்ல பலத்தையும் தாது புஷ்டியையும், நல்ல இரத்த ஓட்டத்தையும் உண்டு பண்ணுவதில் இதற்கு நிகரான மருந்துகள் கிடையாது இதை மதனகாமேஸ்வரிலேகியஅநுபானத்தில் சாப்பிடவேணடும். ஒரு மண்டலம் (48-நாள்) உபயோகிக்கக்கூடிய பஸ்பம் விலை ரூபாய் 15—8—0
½ மண்டலம் (24 நாள் உபயோகிக்கக்கூடிய பற்பம விலை 7—8—0
மதன காமேஸ்வரி லேகியம் 1-சேர் டின் … … விலை 8—0—0
தபால் சார்ஜ் பிரத்தியேகம்

## நீரிழிவுக்கு அப்ரேக்செந்தூரம்

வயது 40-க்கு மேல் வாழ்க்கைக்குள்ள கருவி காரணங்கள் சற்று இளகும். அப்போது மூத்திரப்பை பலன் அற்று ஜனனேந்திரியம் நீற்றுப் போய் இன்னும் பல காரணங்களால் மூத்திரப்பெருக்கு உண்டாகி சரீரம் மெலிந்து ஜீவனை விட்டுவிட வேண்டியிருக்கும் நிலைமையில் நீரிழிவு வியாதியினல் இறந்து போகிறார்கள் என்கிறார்கள். நீரழிவுக்கு நமது அப்ரேக்கு செந்தூரம் சாப்பிட்டால் அது குண்டிக்காய் மூத்திரப்பை முதலிய கருவிகளுக்குப் பலம் கொடுத்து ரட்சிப்பதுடன் நீரிழிவினல் ஏற்படும் சகல கோளாறுகளேயும் நிவர்த்திசெய்து நல்ல மேனியை உண்டுபண்ணி சந்தோஷத்தில் வைத்து வளர்த்தும் அதிமதுரப்பால் ரஸாயனத்தில் சாப்பிட வேண்டும். 20 நாள் மருந்து [அநுபான ரஸாயனத்துடன்]விலை ரூ.16-0

## தாளகபற்பம்

நாட்பட்ட காசம், இருமல், க்ஷயம், சளி, கோழை, கஷ்ட சுவாசம் முதலிய ரோகங்களேயும் வெகு சீக்கிரத்தில் குணப்படுத்தும்.

முதல் நெம்பர் பற்பம் புட்டி 1-க்கு விலை ரூ. 7—0—0
2-ம் நெம்பர் பற்பம் புட்டி 1-க்கு விலை ரூ. 5—0—0
லேகியம் கண்டங்கத்திரி அல்லது தூதுவளை ரசாயணம் 10-நாளைக்கு விலை ரூ. 3—8—0
[தபால் செலவு வேறு]

## நாகபற்பம்

மூல சம்பந்தமான எவ்வித வியாதியாயிருந்தாலும் சரி, வெகு சீக்கிரத்தில் குணப்படுத்தும். ஆபரேஷன் வேண்டியதில்லை, பெருமுறை மருந்து. முதல் நெம்பர் பற்பம் புட்டி 1-க்கு விலை ரூ, 10—0—0
2-ம் நெமபர் பற்பம் புட்டி 1-க்கு விலை ரூ. 6—0—0
தபால் செலவு வேறு

நற்சாட்சி:—பழனி சற்குரு மகாதேவஸ்வாமிகள் சித்த ஆயுள்வேத பண்டிதர் ஸ்வாமிகள் தயார் செய்யும் தங்கம், தாம்பரம், வெள்ளி பவளம், முத்து, அயபற்ப செந்தூரங்கள் மிகவும் உயர்ந்த முறைகளால் தயார் செய்யப்படுகின்றன. சுமார் 1 வருஷ காலமாக என் பேத்திக்கு இருமல் வியாதி கண்டு கபத்தினலும் சுவாசத்தினலும் கஷடப்பட்டும, அநேக டாக்டர்களால் கைவிடப்பட்ட வியாதியை ஸ்வாமிகள் பிறர் ஆச்சரியப்படத்தக்க விதமாய் சௌக்கியம் செய்து விட்டார். இவருடைய அபார சக்தியை பொது ஜனங்களுக்குத் தெரியப்படுத்திக்கொள்வதில் மிகவும் சந்தோஷமுள்ளவனுயிருக்கிறேன். L கல்யாணராமய்யர் ரிடையர்டு தாசில்தார் அண்டு சிவகிரி திவான்.

அய்யா எனக்கு 4 வருஷகாலமாய் ஒரு நாளைக்கு 35 தரம் குறையாமல் மூத்திரம் இறங்குவதும் மலம் தீய்ந்து ரெத்தத்துடன் இரண்டு மூன்று தினத்துக்கு ஒரு தரம் இரங்குவதும், திரேக அசதியும், தலை மயக்கமும் இன்னும் அநேக வியாதியுடன் கஷடப்பட்டு இம் மலாய் நாட்டில் அநேக மருந்து சாப்பிட்டும்! ஊசி மூலியமாக திரேகத்தில் மருந்து செலுத்தியும், சவுகரியப்படாமல் கஷடப்பட்டு இருக்கையில், சென்னையில் பிரசுரித்து வெளிவரும் (தமிழ் நாடு பத்திரிகையில்) மேற்படி சுவாமியின் விளம்பரத்தைப் பார்த்து கடிதத்தின் மூலம் தெரிவித்தனன். எழையின்மீதில் கிருபையுடன் தாங்கள் அனுப்பிய 24 நாள் தங்க பற்பமும், 24 நாள் நாகபற்பமும், 24 நாள் அப்ரேக் செந்தூரமும் வகைக்கு 1 அரிசியிடையாகச் சேர்த்து காலை மாலை இருவேளையும் மேற்படி பற்பங்களுக்கு அநுபானமாக அனுப்பப்பட்ட மஹா வில்வாதி லேகியத்தில் வைத்துச் சாப்பிட்டு. தங்களால் அனுப்பப்பட்ட சந்தனுதி தைலத்தில் ஸ்நானம் செய்து வந்தேன் எனக்கு மேற்கண்ட வியாதி முற்றிலும் சுகம். மேற்படி சுவாமியுடைய ஔஷதங்கள் சாப்பிடுவதற்கு. குமட்டல், வாந்தி முதலியன இல்லை. ருசியுடன் கூடியது. பத்தியம் தவறினல் ஒரு தொந்திரவும் செய்யாது. எந்த தேசத்திலிருந்தும் தருவித்துச் சாப்பிடலாம். அயல் நாட்டு வியாதியஸ்தரின் பேரில் அவர் வைத்துள்ள அன்பு நேரில் தாங்களே தெரிந்து கொள்ளக்கூடும்! மேற்படி சுவாமிக்கு கடவுள் நீண்ட ஆயுளைக்கொடுப்பாராக! அ. ஆறுமுகம் செ, 11 கேப்பிங்ரோடு கோலாலம்பூர், மலாய்நாடு.

சற்குரு மகாதேவஸ்வாமிகள் மகா ஆபத்தான வியாதிகளை சொஸ்தப்படுத்துவதில் திறமை வாய்ந்தவர் என்று நற்சாட்சி கூறுவேன். அவர் அளவு கடந்த சமத்துவம் வாய்ந்தவர் வியாதியஸ்தர்களுக்கு ஆச்சரியப்படத்தக்க சொஸ்தம் கொடுப்பவர், சிகிச்சை செய்ய வேண்டியவர்களுக்கு வேண்டிய சகல நல்ல குணதிசயங்களும், அடையப்பெற்றவர். அநேக காலமாக ஸ்வாச காசத்திம் கஷடப்பட்டேன். வியாதியின் குறி தென்படும்போது உயிர் துறந்து மறு உலகம் போவேன்போல் உட்கார்ந்திருந்தேன் நான் இறக்கப்பட்டுப்போவேன் என்ற கடைசி காலத்தில் கடவுள் இந்த சுவாமிகளிடம் என்னைச்சேர்த்தார். குணப்படுத்த நிரம்பப் பணம் வேண்டிக் கொண்டவராயிருந்தாலும் சம்மதித்து நீண்டகால அவதியை சொஸ்தம் செய்தார். தாளக பற்பத்தை கடுக்காய் ரசாயனத்தில் கொடுக்க அது தேவையான குணத்தைக் கொடுத்தது. நான் ஆச்சரியப் படும்படி 1 மண்டலத்தில் குணம் வாய்ந்தது, நான் குணம் பெற்று இப்போது அநேக வருஷம் உலகில வாழ இருக்கிறேன், கஷடப்படும் அநேகருக்கு தேவையான சமயம் உதவியாயிருக்க அவர் ஆசீர்வதிக்கப்பட வேண்டுமாக கடவுளை வணங்குவேன். (Sd.) K. V. வெங்கடேஸ்வர அய்யர்,
பழனி, 19-2-1925 ஜவுளி வியாபாரம்

மலாய் நாட்டிலுள்ளவர்கள் மருந்துக்கு ஆர்டர் செய்யும்போது முன்பணம் ரூ. 5 அனுப்பவேண்டும். விவரமான கேட்லாக்குக்கு இன்றே எழுதவும்.

தந்தி விலாசம் "சற்குரு"! பழனி

# ஸ்ரீமத் சற்குரு மஹாதேவ சுவாமிகள்,

சதானந்த மெடிகல் ஹால் பழனி, (தென்னிந்தியா)

மலாய் நாட்டிற்கு நமது ஏஜண்டு, M. E. நாயுடு அவர்கள் டிரஸ்ஸர், 86 டேலுக், கோடங்குரோட், (கிளாங்கு,) KLANG F. M. S.

'குமரன்'

வழிபற்றி உண்மை நெறி காண்மின்!

வாரப்பதிப்பு
வருடச்சந்தா
உள்நாடு ரூ. 5
வெளிநாடு ரூ. 6

மாதப்பதிப்பு
வருடச்சந்தா.
உள்நாடு ரூ. 1-8-0
வெளிநாடு,, 2-0-0

மானேஜர்.

பார்ப்பனரல்லாதார்
சமூக முன்னேற்றத்திற்கு
உண்மையுடன் உழைப்பவன்
"குமரன்"

ஆதலின் இன்றே சந்தாதாரராய்ச்சேர்ந்து நாட்டின் விடுதலை வழி கடைப்பிடியுங்கள்.

ஆணித்தரமான அபிப்பிராயம்,
அச்சமற்றகண்டனம் ஏராளமான செய்தி.
தேனென இனிக்கும் செந்தமிழ்நடை,
தேசிய தமிழ் வாரப்பத்திரிகைக்குள் தலைசிறந்து,
இந்தியாவிலும் வெளிநாடுகளிலும்
ஏராளமான சந்தாதாரர்களை உடையது.
எனவே விளம்பரத்திற்குத் தகுந்த பத்திரிகை
'குமரன்' அன்றிவேறில்லை.
இன்றே மானேஜருக்கு எழுதி விபரம் அறியுங்கள்
மாதிரிப்பிரதி இனாம்!

மானேஜர்.
ஜனவைசியன் கம்பெனி லிமிடெட்
காரைக்குடி

மனமறி நூல்

ஒருவர் மனதில் நினைத்ததை இன்னதென்று தெளிவாய்க்கூறும் அருமையான அருட் சாஸ்திரம். வடமொழி நூலை ஆதாரமாகவுடையது. விலை ரூபாய் ஒன்று. மு. வடிவேல் செட்டி,
110, சுப்பராயன் தர்மராஜா கோவில் வீதி
புதுச்சேரி.

கதர்ப் பத்திரிகைக்கு
வருட சந்தா ஒரு ரூபாய் மாத்திரம்
அல்லது
8000 கஜம் நூல்.

அகில பாரத சர்க்கா சங்கத்தின் தமிழ் நாட்டு இலாகாவாகிய எங்களால் மாதம் இருமுறை கதரைப்பற்றி மாத்திரம் பிரசுரிக்கப்படும். எட்டுப் பக்கங்களடங்கிய

"குடி நூல்"

என்ற கதர்ப்பத்திரிகையின் வருட சந்தா ஏழை ஜனங்களின் உபயோகத்தை முன்னிட்டு ஒரு ரூபாய் அல்லது 8000 கஜம் நூல் என்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. சந்தாவை முன்பணமாகவே மணியார்டர் அல்லது ஸ்டாம்பு மூலமாக அனுப்பவேண்டும். பத்திரிகையை வி. பி. யில் அனுப்புவதில்லை.

அகில இந்தியாவிலும் விசேஷமாகத் தமிழ் நாட்டிலும் கதரியக்கத்தின் முன்னேற்றத்தைப்பற்றி எல்லா விவரங்களும், கதரைப்பற்றிய கதர் பக்தர்களால் எழுதப்பட்ட வியாசம், கதை, கவிதை முதலிய யாவும் குடி நூலில் பிரசுரிக்கப்பட்டு வருகிறது. கதரியக்கத்தில் பக்தியுள்ளவர்கள் சந்தாதாரர்களாகச் சேர்ந்து வேண்டிய உதவிபுரியுமாறு கேட்டுக் கொள்ளுகிறோம்.

மானேஜர்,
சர்க்கா சங்கம், ஈரோடு.

சுப்பிரமணிய கவசத்து

சகலகாரியங்களும் அனுகூலம். சகலவசியங்களும் ஏற்படும். விசுவாசம், வியாதியை கொடுக்கும் பயங்காரங்கள் நீக்கும் தரித்திரம் முதலியது அணுகாது.

இன்னும் வேறு விஷயங்களுக்கும் எழுதி தெரிந்து கொள்ளவும். அன்னிய நாட்டு வாசிகள் முன் பணம் தபால் செலவுடன் சேர்த்து அனுப்ப வேண்டும்.

வி எஸ் அய்யர், சுப்பிரமணிய பாசி
பழனி. Palni P. O (S. I.)

தமிழ் புக்கீப்பிங்.

கணக்கு வைக்கும் முறையை நன்கு போதிப்பது. ஒற்றைப் பதிவு, இரட்டைப் பதிவு இரண்டு பாகங்களுமடங்கி இருக்கின்றன. அநேக வியாபார இரகசியங்களையு முடையது. வியாபாரிகள், மாணவர்கள், கம்பெனி உத்தியோகஸ்தர்கள் எல்லோருக்கும் அவசியம். விலை ரூபாய் 1.

தே. ஆறுமுக செட்டி,
முதலியார்ப் பேட்டை, புதுச்சேரி

இனாம்! இனாம்!! இனாம்!!!

பெண்களுக்கு

அழகான புடவை! உயர்ந்த மல்லில், பச்சை, புளு, வயலெட், கருப்பு, செம்பு. ஸ்டீப் கலர்கள் கெட்டிச்சாயம். பளப்பளப்பான வசீகரத்தோற்றமுள்ளது.

2¼ அகலம் 18 முழம் புடவை ... ரூ. 4—4—0
5 முழம், அசல் பட்டு, குஞ்சம் கட்டின
வில்க் அங்க வஸ்திரம் ... ... ரூ. 4—8—0
2¼ அகலம் 7½ முழம் அழுத்தமான கை
நெசவு வேஷ்டி ஜோடி ... ... ரூ. 4—6—0
"ஸ்பெஷல்" கேட்லாக் இனாம்!

The Madura Oriental Trading Co.,
Laxmi Cloth Store, MADURA.



பெட்ரோமாக்ஸ் லைட்.

லைட்கள், மாண்டில், டூம், தனித் தனி சாமான்யாவும் விலைநயமாய் கிடைக்கும். கியாட்லாக் இனாம்.
ஸன் கம்பெனி, தஞ்சாவூர்.

திருப்பூர்
சுத்த கதர் ஜவுளிகள்.

பலரகம் வேஷ்டிகள், துண்டுகள், வெள்ளை பீஸ் ரகங்கள், ஷர்ட்டிங், கோட்டிங், சீட்டி. தினுசுகள், தாவணிகள், சுங்கடி சேலைகள் இன்னும் அநேக தினுசுகள் எங்களிடத்தில் கிடைக்கும். தேவைக்கு ஆர்டர் செய்யுங்கள். வி. பி. அனுப்ப முடியாத வெளிநாடுகளுக்கு பூராத் தொகையையும் முன் பணமாக அனுப்பவேண்டும்.

(அத்தாட்சி பத்திரம்.)

ஸ்ரீமான் ஆர். எம். எஸ். சிதம்பரம் செட்டியார், முத்துசாமி செட்டியார் கைநூலால் கைத்தறியால் தயார்செய்யப்பட்ட சுத்த கத்தர் துணிகளையே உற்பத்திசெய்து நியாயமான விலைக்கு விற்றுவருகிறார்.
S. இராமநாதன்: காரியதரிசி, கத்தர் இலாகா
விலாசம்:—

ஆர். எம். எஸ் சிதம்பரம் செட்டியார்,
முத்துசாமி செட்டியார்,
கத்தர் டிப்போ, திருப்பூர். (தென் இந்தியா)

மூன்று மாதத்தில்
மோட்டார் ஓட்ட கற்றுக்
கொள்ளலாம்


1916௵ ஸ்தாபிக்கப்பட்டது.

எங்கள் கம்பெனியில் மோட்டார் வண்டிகளை ஓட்டவும், பிரிக்கவும், பூட்டவும் வேறு பல சிறு திருத்தங்கள் செய்யவும் கற்றுக் கொடுக்கப்படும். தேர்ச்சியடைய மூன்று மாதம் ஆகும். தேர்ச்சி அடைந்த பின்பு கவர்ன்மெண்டு லைசென்சும் எமது கம்பெனி சர்டிபிக்கேட்டும் கொடுக்கப்படும்.

மற்ற விபரத்திற்கு நேரில் எழுதி தெரிந்துகொள்ளலாம்.

மதுரை தென்னிந்தியா
மோட்டார் இஞ்சினியரிங் ஒர்க்ஸ்,
டைலாப்பூர்-மதுரை.

முன் விலை ரூ. 14. இப்பொழுது ரூ. 7
22 காரட் ரோல்டு கோல்டு புது மாடல்
கைக்கடியாரங்கள்



மேற்கண்டபடி எந்த ஷேப் வேண்டுமானாலும் அனுப்பப்படும். வேலைப்பாடு மிகவும் உறுதி கையில் கட்டிக்கொண்டால் தங்க ஆபரணம் போல் இருக்கும். ஒவ்வொரு கடியாரத்திற்கும் ரோல்டு கோல்டு அமெரிக்கன் கைச்சங்கிலி இனாமாய்ச் சேர்த்து அனுப்பப்படும் 5 வருஷம் உத்திரவாதம். ரூ. ஏழுமட்டும்.

CANADIAN WATCH PEOPLE,
George Town, Madras.


ஸ்ரீமதி கண்ணம்மாள் அவர்களால், ஈரோடு "உண்மை விளக்கம்" பதிப்பகத்தில் பதிப்பிக்கப்பெற்று வெளியிடப்பட்டது.

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை